GERMANY: 1DM, SWITERLAND: 1SFrs, FRANCE: 5Frs, U.K: 50P, DENMARK: 5Kr

வருடம் - 02 திருவள்ளுவர் ஆண்டு - 2026 இதழ் - 20

Largest Circulation in Europe

இளைஞன்

தை - 1996 மாதஇதழ் - ஜேர்மனி

ELAIGNAN TAMIL MONTHLY

திலீப் றேடேர்ஸ்

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப்பொருட்கள், ஒடியோ-வீடியோ-சி.டி., வார-மாத பத்திரிகைகள், மரக்கறி-கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள-

THELIB TRADERS
Taunus Str. 17A, 60329 Frankfurt/M
Tel: 069/250361-2 Fax: 069/234045


# விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மாபெரும் சக்தி!

## சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே அறிக்கை

(நாகபுரி)
விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மாபெரும் சக்தி. அதன் உணர்வு கண்டு பெருமைப்பட வேண்டும். விடுதலைப் புலிகளையும், தமிழர்களையும் கொல்வது நீடித்தால், மாராட்டிய மாநிலத்தில் பந்த் நடத்துவோம் என்றும், விடுதலைப்புலிகளின் உணர்ச்சி கண்டு இந்தியர்கள் பெருமைப்படவேண்டும் என்றும் தமிழரல்லாத ஒருவரும், சிவசேனைஇயக்கத்தின் தலைவருமான பால் தாக்கரே பகிரங்கமாக விடுதலைப்புலிகள்இயக்கத்துக்கு ஆதரவுதெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்!

## கந்தப்புவும், சோமண்ணையும்



கந்தப்பு: (கொஞ்சம் பெருமையாக) பாருங்கோவன் என்னுடைய பேரப்பிள்ளைகள் லண்டனிலிருந்து வரப்போறதால நானிந்த வயதிலை ஆங்கிலம் படிக்க ஒடித்திரியிறன்.
சோமண்ணை: (மிகவும் பெருமையாக) உங்களுக்குப் பரவாயில்லை. நான் பிரெஞ்ச, டொச்ச, இங்கிலீச, என மூன்று பாசையெல்லே படிக்க வேண்டியிருக்கு. என்னுடைய மூன்று பேரப்பிள்ளைகளும் மூன்று நாட்டிலேயெல்லே இருக்குதுகள்.
கந்தப்பு: !!???...

-பாணு, இங்கிலாந்து-

### தெற்காசிய விளையாட்டுப் போட்டி:

# எக்காள சிரிப்புடன் சிங்கள அணி பவனி வருவதா?

வை. கோபால்சாமி விடுத்துள்ள ஓர் அறிக்கையில் - சொந்த சகோதரர்கள் ஈழத்தில் துன்பத்தில் மடியும் அவலத்தை எண்ணி தமிழர்கள் உள்ளத்தில் வேதனை நெருப்பு மூண்டுள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் உணர்வு மங்காது, மறையாது கிளர்ந்து எழும் என்பதை திருச்சி மாவட்டத்தில் இஸ்லாமிய இளைஞன் அப்துல் ரகூப் தன் இன்னுயுரை நெருப்புக்கு ஒப்படைத்து தன்னை தியாக நெருப்புக்கு அர்ப்பணித்துள்ளான். தமிழ் நாட்டுக்கு தொண்டு செய்ய வேண்டிய ஒரு வீர இளை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## அப்பாவி மக்களுக்கு பாதுகாப்பு தருவோம்

(கொழும்பு)
13 ஆண்டுகளுக்குப்பிறகு, யாழ்ப்பாண மண்ணில் இப்போதுதான் சிங்கள ராணுவ முகாம் தொடங்கப்பட்டது. ராணுவ அதிகாரி தொடங்கி வைத்தார்.

விடுதலைப்புலிகளின் எக்கு கோட்டையாக விளங்கிய யாழ்ப்பாணம் நகரை சூரிய ஒளித்தாக்குதல் நடத்தி சிங்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

### யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய


# படையினருக்கு காணி!

(கொழும்பு)
இன்று எமது இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் போராடுவது அங்கு இல்லாதுபோன ஆட்சி அதிகாரத்தை திரும்ப ஸ்தாபிக்கவேயாகும்.
அதனைச் சரியான முறையில் ஸ்தாபிக்க மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் செல்லலாம். அதனால் இராணுவச் சிப்பாய்களுக்கு அங்கு காணிகள் வழங்கி, வீடுகளை அமைத்து நிரந்தரமாகக் குடியமர்த்த வேண்டுமெனக் கொழும்பு மாவட்ட ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் சுசில் முனசிங்ஹ பாராளுமன்றத்தில் கூறினார்.
மேலும் அவர் கூறியதாவது, எமது இராணுவத்தினர் உயிர்த் தியாகத்துடன் போராடுகின்றனர். நாம் அவர்களுக்கு எல்லாப் பிரதிபலன்களையும் கொடுக்க வேண்டும்.

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

பிராங்பேர்ட் நகரில் மக்கள் மனங்கவர்ந்த ஸ்தாபனம்! ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மையை உணர்வீர்கள்!

அம்பாள் ஆசியன் சொப்



சாறி வகைகள், அனைத்துரக ஜவுளிகள், எவர்சில்வர் பொருட்கள், மற்றும்
கடலுணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், அலங்காரப்பொருட்கள்
தங்க நகைகள், மங்கள வைபவங்களுக்கான அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்

AMPAL ASIAN SHOP MAINZERLAND STR. 111, 60329 FRANKFURT/M, Tel & Fax: 069/231277

வருடம் - 02 இதழ் - 20 தை - 1996

# இளைஞன் பார்வையில்!

## தமிழ் ஈழம் விரைவில் மலருமா?

இலங்கைத்தலைவர் சந்திரிகா 1995 சித்திரை மாதத்திலிருந்தே சமாதானத்திட்டம் பற்றியும் அதற்கான நகல் திட்டங்களை தயாரிக்கிறேன் தயாரிக்கிறேன் என்றும் எனது சட்ட நிபுணர்கள் அப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தம்பட்டம் அடித்து, அதே வேளையில் தனது ராணுவ பலத்தையும் தீவிரப்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்றும், மந்திரிகளை அனுப்பியும் பெரியதொரு தாக்குதலுக்கு ஆயத்தங்கள் செய்கின்றது என்ற உறுத்தங்கள் இருந்தன. ஆனால் இன்று உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளன.

அதனால் இன்மேலும் காலதாமதம் ஆக்கப்பட்டுள்ள அது புரட்சிகர தீர்வுத்திட்டமாகவோ அமைதித்திட்டமாகவோ இருக்குமென்பது சந்தேகமே. அதனை ஒரு "ராஜசகுனித்தனம்" என்றும் வர்ணிக்கப்படுகின்றது. போராளிகளின் படை பலத்தைக்கணக்கிடவும் ஒரு வெளிநாட்டிலிருந்து உதவியைப்பெறவுமே அவர்கள் ஈழப்புலிகளுடன் பேச்சு வார்த்தை என்ற நாடகம் ஆடினர். இவற்றையெல்லாம் செய்து அன்மையில் நடந்த போரில் அப்பாவித்தமிழர்களையும் நூற்றுக்கணக்கான புலிகளையும் கொன்று குவித்தது மட்டுமல்ல, மக்களுக்கு பாதகம் விளைவிக்கமாட்டோம் என்று கூறிக்கொண்டு 3 லட்சம் தமிழ் மக்களை வான் தாக்குதலாலும் "செல்" அடிகளாலும் விரட்டியடித்து இப்பொழுது அவர்கள் வன்னிப்பகுதிகளான கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார் பகுதிகளில் அகதிகளாகச் சென்று அல்லல் படும் நிலைக்கும் தள்ளி உள்ள ஒரு அரக்கி என்றே சந்திரிகாவை கூறமுடியும்.

புலிகளை யாழ் பகுதியிலிருந்து விரட்டி விட்டோம் இனி உங்களுக்கு ஒரு ஆபத்தும் நேராமல் பார்த்துக்கொள்வோம் உடனடியாக நீங்கள் யாழ் பிரதேசங்களுக்குச் செல்லுங்கள் புனருத்தாரண வேலைகளும், நிவாரண வேலைகளும் தொடங்கியுள்ளோம் விரைவில் திரும்புங்கள் என்று விரட்டுகின்றார்.

சிங்கள ராணுவம் மட்டுமே யாழ்நகர் மேற்கு, கிழக்கு பகுதிகளில் ஈ அடித்துக்கொண்டும் வெறிச்சோடிக்கிடக்கும் வீடுகளை உடைத்து பெறுமதி வாய்ந்த பொருட்களை திருடுவதிலுமே ஈடுபட்டுள்ளது. இவர்களை வெளியேற்றுவதற்காக யார்தான் சந்திரிகாவின் சகுனி உபதேசங்களுக்குச் செவிமடுப்பார்கள். தமிழ் அகதிகள் திரும்பாவிடில் ஒரு வேளை இவர்கள் மேலும் சிங்களராணுவம் என்ற நிலையும் வலுவாக நிலவுகின்றன. அதேவேளை தமிழர் பகுதிகளை ஆக்கிரமத்துள்ள சிங்களவர்களை வெளியேற்ற சந்திரிகா முனையாவிடில் சந்திரிகாவின் முயற்சிகள் வெறும் ஏமாற்று வேலையே.

ஏமாற்று வித்தைகளுக்கும் வித்தெனக் கருதப்படும் அந்த மந்திர லட்சணம் கொண்ட அதிகாரபரவலாக்குதல் ' தமிழ் பாரம்பரிய நிலப்பகுதிகள், மாநில சுயாட்சி, பாதுகாப்பு அம்சங்களையும் துல்லியமாக அறிவித்து ஏற்றுக் கொள்ளும் வரை சமாதானத்திற்கே வெகுதூரம் இல்லை என்பதே எமது அபிப்பிராயம்.

## தெற்காசி...

ஞன் தீக்குளித்து தன்னைத் தானே அழித்துக்கொண்ட செய்தி அறிந்து நம் இதயம் ரத்தக்கண்ணீர் வடிக்கிறது.

நெருப்பின் ஜீவாலையில் அந்த வீர வாலிபனின் தியாகத்திருமேனி கருகத் தொடங்கியபோது "புறக்கணிப்பீர்! புறக்கணிப்பீர்! தெற்காசிய விளையாட்டுப் போட்டியை புறக்கணிப்பீர்!" என்று முழக்கமிட்டு "ஈழத்த மிழர்கள் வாழ்க" என்று சொல்லிக்கொண்டு மண்ணில் சாய்த்திருக்கிறார். மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த தியாக இளைஞனின் ஜீவன் அடங்கியது.

ஈழத்தில் தமிழர்களை கொன்றுகுவித்துவிட்டு சிங்கள அரசு தமிழ்நாட்டுக்கு எக்காளச்சிரிப்போடு தனது அணியை அனுப்பி இருக்கிறது. சிங்கள விளையாட்டு மந்திரி தலைமையில் 302 பேரைக்கொண்ட சிங்கள அணி சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் சிங்கக்கொடியோடு பவனி வர இருக்கிறதாம்.

சிங்கள அமைச்சர் மமதையோடும் திமிரோடும் கூறும்போது-"கறுப்புக்கொடி எதிர்ப்பை பற்றி நாம் ஒன்றும் கவலைப்படவில்லை. சிங்களவீரர்களுக்கு தலா ஒருலட்சம் ரூபா இன்சூரன்ஸ் செய்யப்பட்டு உள்ளது". என்று தெரிவித்துள்ளார்.

நமது போராட்டம் விளையாட்டுப்போட்டிகளை எதிர்த்து அல்ல. மனித உரிமைகளை அழித்து, தமிழ் இனத்தைப்படுகொலை செய்யும் சிங்கள அரசின் பிரதிநிதிகள் இப்போட்டியில் பங்கேற்பதை எதிர்க்கவும், அவர்களைத் தடுக்கத்தவறிய மத்திய மாநில அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கவும் இப்போராட்டத்தை நடத்துகிறோம் என்று ம. தி. மு. க பொதுச்செயலாளர் வை. கோபால்சாமி எம். பி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

## அப்பாவி...

கள ராணுவத்தினர் கைப்பற்றினார்கள். இதற்காக நடந்த போரில் யாழ்ப்பாணம் நகரம் உருக்குலைந்து போனது நகர மக்கள் வேறு இடம் தேடி போய்விட்டனர்.

குண்டு வீச்சால் சிதைந்து கிடக்கும் நகருக்குள் புகுந்த ராணுவம் தனது நிலையை வலுப்படத்திக்கொண்டது.

கோட்டை கொத்தளங்களில் கொடி ஏற்றி வெற்றியை கொண்டாடிய ராணுவம் இப்போது தங்கள் பாதுகாப்பு முகாமை தொடங்கி உள்ளனர்.

கடந்த 13 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் சிங்கள ராணுவம் தனது முகாமை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளது. ராணுவ மேஜர் வீரசூரியா முகாமை திறந்து வைத்து பேசினார். இதை இலங்கை வானொலி ஒலிபரப்பியது. அதில் அவர் கூறியதாவது-

யாழ்ப்பாணம் நகரில் வாழும் அப்பாவி மக்களுக்கு முழுப்பாதுகாப்பு தருவோம். சிதைந்து போன நகரை சீரமைக்கும் பணிகள் மின்னல் வேகத்தில் செயல்படுத்தப்படும். ஒரு வாரத்திற்குள் ராணுவத்தின் முக்கிய படைபிரிவுகள் இங்கு வந்துவிடும்.

யாழ்ப்பாணம் நகரின் எல்லையில் இருந்து கொண்டு தொல்லை தரும் விடுதலைப்புலிகளை விரையில் விரட்டி அடிப்போம். வலிகாமம் பகுதியை சுற்றியுள்ள இடங்களையும் ராணுவம் தன்வசப்படுத்தும்.

அரசின் தலையாய பணியே நகர மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பதுதான். இவ்வாறு அவர் கூறினார்.

## முதல் நூல்

தமிழில் அச்சான முதல் நூல் "லூாசே தமிழ் வினா விடை" என்ற 38 பக்க நூல். ஆனால், இதில் தமிழ் எழுத்துக்கள் பயன்படுப்படாமல் ரோமன் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. "அம்மா" என்பது "AM-MA" என்று அச்சிடப்பட்டது. 1554 ல் போர்ச்சுக்கல்லில் அச்சிடப்பட்டது.

# துள்ளி வருகுது வேல்! தூரப் போ பகையே!

## வண்ணை ஆனந்தன்

முருகன் சூரனையழித்த நாளது (சூரசம்ஹாரம்). ஆம், கந்தசட்டியின் இறுதி நாள். ஜெர்மனியில் ஒரு நகரில் அமைந்திருக்கும் குமரன் ஆலயத்துக்குச் சென்றிருந்தேன். அது ஒரு அழகான சிறிய ஆலயம். தமிழருக்கு எங்கும் எதிலும் முருகன் தானே? கந்தசட்டி இறுதி நாளானதால் எள் போட்டால் கீழே விழமுடியாத அளவு மக்கள்வெள்ளமங்கே அலைமோதியது. அவ்வாலய நிர்வாகத்தினர் கூட இவ்வளவு மக்களை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பது என் எண்ணம். மக்கள் வெள்ளத்தால் சூழப்பட்ட நான் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டேன். என் அருகே நின்ற இளைஞரொருவர் மெதுவாக என் காதருகே "அண்ணா... சற்றுத்திரும்பிப்பாருங்கள். இரு சிங்களப்பெண்கள் நிற்கிறார்கள்" எனக்கூறி ஒரு கேலி கலந்த சிரிப்பையும் உதிர்த்தார். "கதிர்காமத்தைத்தான் சூறையாடியது போதாதென்று கோணமலைக்கும் நெருக்கடி தருவதும் காணாதென்று குறிஞ்சிக்குமரனையும் ஆக்கிரமிக்க வந்துவிட்டனரோ?" என எண்ணியபடி திரும்பினேன். அழகை மெருகூட்டுவதாய் எண்ணித்தம்மை அலங்கோலப்படுத்திய இருபெண்கள் இந்தக்கோலம் போதாதென்று சிங்கள "கம்பாய"ப் பாணியில் சேலை தரித்து நின்றனர். கானமயிலாட வான்கோழி தானுமதுபோல் ஆடமுற்படுவதுண்டு. இங்கே வான்கோழி ஆட கானமயில் அதுபோல ஆடமுற்பட்ட கோலமது! நல்லவேளை தமிழில்தான் அவர்கள் இருவரும் உரையாடிக்கொண்டிருந்தனர். தமிழனிடமிருந்து தம்மொழியை மெருகூட்ட சொற்களை மட்டுமல்ல, கலை, கலாச்சாரப்பண்பாடுகளைக் கூடக் கடன்பட்டுக்கொண்டிருக்கும் சிங்களவினம், தமக்கெனவொரு பாணியாக சேலையை அணியப்பழகினாலும், இன்று திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் தவிர அன்றாட வாழ்வில் இயற்கையையும், அழகையும், இளமைக்கோலமும் வேண்டி தமிழர் பாங்கிலே சேலையணிவதை வழக்கமாகிக்கொண்டுள்ளனர். இங்கே...! எந்த சிங்களவினம் எம் மொழி, கலை, கலாச்சாரப்பண்பாடுகளை *1948* ம் ஆண்டுமுதல் சிறுகச் சிறுக அழிக்கிறார்கள் எனக்கூறி அகதி அந்தஸ்துப்பெறும் "இதுகள்" அதே சிங்களப்பாணியில் தமிழ்த்தெய்வமாம் முருகன் ஆலயத்துள்! சிங்களப்பண்பாட்டையும் வாழ்வுமுறையையும் "இதுகளால்" ஏற்க முடியுமாயின், அகதி அந்தஸ்து ஐரோப்பிய நாடொன்றில் கோருவது ஏன்? ஓ! டொச்மார்க் (ஜேர்மன் பணம்) எண்ணும் தேவையுண்டே!!

நெஞ்சை வாட்டும் வேதனையுடன் குளிர்வாட்டினாலும் கவலையில்லையென சிரமத்துடன் ஒருவாறு வெளியே வந்தேன். அங்கே...! இரு இளம்பெண்கள் ஆலய வெளிப்படிக்கட்டில் ஒருகாலும், வீதியில் மறுகாலுமாய் நின்று கொண்டு வீதியின் கரையில் நின்ற இரு இளைஞர்களுடன் விடலைத்தனமாக மிக உற்சாகத்துடன் உரையாடிக் கொண்டிருந்தனர். தமிழிலா? இல்லை, ஜெர்மன் மொழியில்! உள்ளே கம்பாய தந்த புழுக்கத்தால் வெளியே வந்தால், தமிழுக்குச் சூரசம்ஹாரம் நடக்கிறது இங்கே, அதுவும் தமிழால் வைதாரையும், வாழவைக்கும் முருகன் ஆலயமுன்றலில்! அப்போது எண்ணிக் கொண்டேன், "என் பிள்ளைக்குத் தமிழ் பேசவராது. எனக்கூறிப் பிள்ளை வளர்க்கும் அறிவிலிகள் பெற்ற பிள்ளைகளாய் இருக்கும்" என. திடீரென மின்னல் போல் ஒரு எண்ணம். ஆமாம் இவர்கள் *17, 18* வயது வரக்கூடியவர்களாயிற்றே! நிட்சயம் இவர்கள் இங்கு பிறந்து வளரும் பிள்ளைகளாய் இருக்க முடியாது. ஈழமண்ணில் பிறந்து அங்கே சிறிதுகாலம் வாழ்ந்தபின் இங்கு வந்தவர்களாகத்தான் இருக்க முடியும். இவர்களால் எப்படித்தமிழை மறக்க முடிந்தது? இனம்புரியாத வேதனையால் நெஞ்சு மேலும் வலிக்கவாரம்பித்தது. பொறுமையைக்கடைப்பிடித்துக் கொண்டு காதை மட்டும் தீட்டிக்கொண்டு அமைதியாய் நின்றேன். அவர்கள் பேச்சும் கும்மாளமும் தொடர்ந்தது. ஜெர்மன் மொழியிலே பேசிக்கொண்டிருந்த பெண்களில் ஒருவர் திடீரென சில விடையங்களைத் தமிழில் கூறி முடித்தாள். மற்றவர்களும் "அது தானே?" -எனத்தமிழில் ஆமோதித்தனர். "இதுகளுக்கும்" தமிழ் வரும் என அறிந்துகொண்டேன். நான் புரிந்துகொண்டது இதுதான், "எவ்வளவு தூரம் அன்னிய மொழியில் தன் இனத்தவனுடன் உரையாடினாலும், நெஞ்சைத்தொடுமாறு ஒரு கருத்தை முன்வைப்பதற்கு எவனுக்கும், எவளுக்கும் உதவுவது தாய்மொழியே யாகும்."




ஆலயத்துள் மீண்டும் சென்றேன். சூரசம்ஹாரம் முடித்து முருகனை இருப்பிடம் எடுத்துச்சென்று கொண்டிருந்தனர். நானும் தொடர்ந்தேன். முருகன் இருப்பிடம் சேர்ந்ததும் ஆலய அர்ச்சகர் அமைதியாக அவன் ஆவேசம் அடங்க சாந்திப் பூசையில் ஈடுபடத்தொடங்கினார். நான் முருகனைப்பார்த்தேன். என் மனம் அவனைப்பார்த்துப்பேசியது. "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? -

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

## விதைகள்



வெயிலில் நெடுந்தூரம் பறந்துவந்த நாடோடிப் பறவைகள் முகில்களின் இடையே நுழைந்தபோது குளிரில் நனைந்து களித்தன.

கொஞ்ச நேரத்தில் மழைத் துளிகளாக முகில்கூட்டம் கீழே விழத் தொடங்கியது.

'ஐயோ! நல்ல முகில்கள் விழுகின்றனவே...' என்று இரங்கி அழுதது ஒரு பறவை.

வழிகாட்டிப் பறவையோ 'எல்லாம் நன்மைக்கே' என்றது.

'குளங்கள் நிரம்பும் - நாம் மீன்கள் பிடிக்கலாம். மரங்கள் தழைக்கும் - நாம் கூடுகள் கட்டலாம்.'

அது சொன்னது:-

'நல்லவர்கள்
எழுந்தாலும் நன்மைக்கே
விழுந்தாலும் நன்மைக்கே'

காசி ஆனந்தன்-

கடந்த வாரம் சென்னையிலிருந்து வெளியாகும் ஒரு தினசரியில் தன் உள்ளத்து உணர்ச்சிகளை கொட்டியுள்ளார் ஒரு மானத்தமிழ் வாசகர் ஒருவர் -

# இலங்கையில் அமைதி திரும்புமா?

ஐயா,

அதிகார பரவல், மாகாண சுயாட்சி என்று அறிவித்த இலங்கை அதிபர் திருமதி சந்திரிகா அமைதி பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று தன் ராணுவத்தை நம்பி களத்தில் இறங்கி இருக்கிறார். தினமும் தினசரிகளை பார்த்தால் அப்பாவி தமிழர்களும் அதிகமாக பலியாகிறார்கள் என்ற செய்தியை கேட்டபிறகும் தமிழகத்தில் குறிப்பாக தலைவர்கள் மத்தியில் எந்த சலசலப்பும் இல்லை.

இலங்கை பிரச்சினை என்றால் அது எல்.டி.டி.இ. இயக்கம் மட்டுமே என்று எண்ணிதான் இன்றைய தலைவர்கள் மவுனம் கடைபிடிக்கிறார்கள். அதனால்தான் இலங்கை அரசு புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் தொடர்ந்து தமிழினத்தையே பூண்டோடு அழிக்கும் முயற்சிக்கு நம் இந்தியஅரசின் உதவியை கோரி வருகிறது. நம் இந்திய அரசு உண்மையில் இலங்கை தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்டிருந்தால் சமீபத்தில் இலங்கைக்கு அனுப்பிய அகதிகளை பற்றி ஒரு வார்த்தைகூட பேசாதது ஏன் என்று தெரியவில்லை.

நமது முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி ஆட்சியில் இருக்கும்போதே அந்த நாட்டு ராணுவத்தின் சாதாரண சிப்பாய் ஒருவனால் அவமானப் படுத்தப்பட்டபோது ஒரு கண்டனம் கூட தெரிவிக்க இயலாத இந்தியஅரசு அவ்வப்போது இலங்கை கடற்படையினரால் நமது எல்லைக்குள்ளே தமிழக மீனவர்கள் சடலமாக திருப்பி அனுப்பப்பட்ட போதும் வாய் மூடித்தான் வேடிக்கை பார்க்கிறது.

இலங்கையில் நடப்பது உள்நாட்டு கலவரம் என்று இது வரை உலக நாடுகளை இலங்கை ஏமாற்றி வந்தது. உள்நாட்டு கலவரம் என்றால் போலீஸ்துறையே அதை முடிவுக்கு கொண்டுவர முடியும். ஆனால் ஒரு நாட்டு ராணுவமே, முழுவதுமாக இறங்கி முப்படை தாக்குதல் நடத்தும் போது நிச்சயம் இது ஒரு இனப்பிரச்சினை என்பது உலகிற்கு காட்ட வேண்டும். எனவே இன்னும் நமது மாநில தலைவர்கள் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து வாய் திறக்காமல் இருந்தால் இலங்கையில் தமிழர்களின் அவதிக்கும், அகதிக்கும் முழு முதற்காரணம் என்ற வரலாறு நிச்சயம் இவர்கள் பெயரை கறுப்பு மையினால் எழுதிவைக்கும்.

ஜி.அசோக்குமார்,
புதுவை.

## வாசகர்கள் கவனத்திற்கு!

அன்பார்ந்த வாசகர்களே!

இந்த "இளைஞன்" இதழில் முதல் பக்கத்தில் "கந்தப்பும், சோமண்ணையும்" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டதைப் போல், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இன்றைய நாட்டு நடப்பை பிரசுரிக்கவுள்ளோம். அதற்கான நாட்டு நடப்பை உங்களிடமிருந்துதான் எதிர்பார்க்கின்றோம்.

கந்தப்புவும், சோமண்ணையும் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். சந்திரிகா அம்மையார், ஜெயலலிதா அன்றி, ரத்வத்தை அய்யா, மற்றும் ஐரோப்பாவில் காதில தோட்டுடனும், கிழிந்த காற்சட்டையுடனும் இதுதான் "ஐரோப்பா நாகரீகம்" என்று பீத்தல் பெருமை பேசிக் கொண்டு பவனி வரும் இன்றைய வாலிபர்களைப்பற்றி..... எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

-இளைஞன் குழு-





* திருமண வாழ்த்து மடல்கள்
* விளம்பர அறிவிப்புப் பலகைகள்
* கோயில் திரைச்சீலைகள்
* உருவப்படங்கள்

மற்றும் சகல விதமான ஓவிய வேலைகளுக்கும், திருமண, பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:
தொலைபேசி: 069/ 70 44 39

# பெண்ணுலகம்



குறைப்பிரசவம் என்பது கர்ப்பம் தரித்தபின் 28 வாரங்கள் வரையில் கரு சிதைந்து அல்லது இறந்து வெளிப்படுதல் ஆகும். கருச்சிதைவு ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும்தான் ஏற்படும் என்பதில்லை. பல நிலைகளில் அதாவது, கர்ப்பம் தரித்திருக்கிறோமா என்பதை அறிந்து கொள்ள முடியாத சில நாட்களிலேயும் கருச்சிதைவினால் குறைப்பிரசவம் உண்டாகிறது. இந்தகாலங்களில் கரு உருப்பெற்று இருக்கா்து. ஆனாலும் வழக்கமான காலங்களைவிட அதிக ரத்தப் போக்கு இருக்கும்.

மூன்றில் ஒரு பெண்ணுக்கு குறைப்பிரசவம் உண்டாகிறது. இதில் 6 ல் ஒரு பெண்ணுக்கு 8 அல்லது 12 வது வாரத்தில்தான் ஏற்ப்டுகிறது. 3 சதவிகித பெண்களுக்குகருத்தரித்த28 வது வாரங்களில் குறைப்பிரசவம் ஆகிறது என்றாலும், பொதுவாக கர்ப்பம் தரித்த 14 வாரங்களுக்குள்தான் குறைப்பிரசவம் நடக்கும்.

ஆரம்ப காலத்தில் கருச்சிதைவால் ஏற்படும் குறைப் பிரசவத்தில் ரத்தப்போக்கு அதிகமாக இருக்கும். ஆனால் 14 முதல் 26 வாரங்களில் ஏற்படும் குறைப்பிரசவத்தில்தான் மிக அதிகமா்ன ரத்தப்போக்கும், வலியும் இருக்கும்.

சில நேரங்களில் குறைப் பிரசவம் ஏற்படும் காலத்தில் குழந்தைகள் உயிரோடு இருக்கவும் வாய்ப்பு உண்டு. இப்படிப்பட்ட குறைமாத சிசுக்கள் கர்ப்பப் பையின் நுனியில் இருந்து வெளியேற முடியாமல் இறந்து விடும். இந்த நேரத்தில் பெண்களுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ரத்தப்போக்கு இருக்கும்.

பெரும்பாலான கருச்சிதைவினால் ஏற்படும் குறைப்பிரசவ காலத்தில் வரும் ரத்தங்களின் நிறம் மாறுபட்டிருக்கும். பழுப்பு நிறத்தில் வெளிவருவது பழைய ரத்தத்திற்கும், நல்ல சிவப்பு நிறத்தில் வருவது புதிய ரத்தத்திற்கும் அடையாளங்களாகும். இந்தக் காலங்களில் வயிறு, முதுகின் அடிப்பகுதி, தொடை போன்ற பகுதிகளில் மாதவிலக்கின்போது ஏற்படுகிற வலியைப்போன்ற வலி இருக்கும். கருத்தரித்த 28 வாரங்களுக்குள் பெண்களுக்கு ரத்தப்போக்கு இருக்குமானால் அது குறைப்பிரசவத்துக்கான அறிகுறி என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

## குறைப்பிரசவத்திற்கான மற்ற அடையாளங்கள்

குறைப்பிரசவம் உண்டாவதற்கு முன் பல நாட்களாக பெண்கள் உடல் ஆரோக்கியம் இல்லாமல் காணப்படுவார்கள். இந்த நேரத்தில் இவர்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் போலவோ, குளிர் ஜுரத்தால் பாதிக்கப்பட்டது போலவோ இருப்பார்கள். ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கும் இது போன்ற வலிகள் இருக்கலாம். அதற்காக அவர்கள், இது குறைப்பிரசவத்துக்கான அறிகுறிகள் என்று பயப்படக்கூடாது. பாதிக்கு மேற்பட்ட பெண்கள் இப்படி பயப்படுகிறார்கள்.

பெண்களுக்கு கருச்சிதைவு அல்லது குறைப்பிரசவம் ஏற்பட்டுவிடும் என்று பயமுறுத்தும்போது ஏற்படும் அதிர்ச்சியால் கூட அப்படி நிகழ வாய்ப்புள்ளது. இதனால் குழந்தைகள் பிறந்தாலும் அவற்றை காப்பாற்றவும் முடியாது. குறைப்பிரசவத்திற்கு அனேக காரணங்கள் உள்ளது.

## மது அருந்துதல்

மது அருந்தும் பெண்களுக்கு குறைப்பிரசவம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் குறைபாடு உள்ளவர்களாக வளர்ச்சி குன்றியும், நரம்புகள் பாதிக்கப்பட்டும், அறிவு வளர்ச்சி குன்றியவர்களாகவும் இருப்பார்கள்.

புகைப்பிடிக்கும் பெண்களுக்கு எடை குறைவான குழந்தைகள் பிறக்கும். இக்குழந்தைகள் மற்ற குழந்தைகளைவிட எல்லா விதத்திலும் குறையுள்ளவர்களாகவும், எளிதில் தொற்று நோய் ஏற்பட்டு வரைவில் இறந்துபோகிற வாய்ப்பு உண்டு.

## மாத்திரைகள்




கருத்தரித்த காலத்தில், மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படாத மாத்திரைகளை உட்கொள்ளக்கூடாது. அப்படி மீறி மாத்திரைகளை உபயோகப் படுத்தினால் அவர்கள் குறைப் பிரசவத்துக்கு ஆளாகிறார்கள். நீண்ட காலம் மகப்பேறுக்காக மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பவர்களுக்கும் இந்த குறைப்பிரசவம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

## கருச்சிதைவுகள்

கருச்சிதைவு செய்து கொள்வதாலும், இயற்கையாக கருச்சிதைவு ஏற்படுவதாலும் கூட கர்ப்பிணிகளின் கர்ப்பப்பை நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்டு குறைப்பிரசவமும், அதிக ரத்தப்போக்கும் ஏற்படும். பாதுகாப்பு இல்லாத முறையில் கருச்சிதைவு செய்து கொள்வதால் அதிக ரத்தப் போக்கு ஏற்படுவதோடு, தொற்று நோய்களும் வலியும் உண்டாகும். இதனால் உடல் நிலை பாதிக்கப்படுவதோடு, பிற்காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்ளும் தகுதியை இழந்து போக வேண்டிய வாய்ப்பும் உள்ளது.

## கருச்சிதைவு பற்றிய கருத்துக்கள்

கருச்சிதைவு பற்றிய கருத்துக்கள் பிறரால் சொல்லப் படும்போதும், கர்ப்பிணிப் பெண் அப்படி நினைக்கும் போதும் ஏற்படும் அதிர்ச்சியான சம்பவங்களால் குறைப்பிரசவம் ஏற்படுகிறது.

## உணர்ச்சிகள்

கர்ப்பிணிப் பெண்கள் அழுதல், சோகமாக இருத்தல், அதிர்ச்சி போன்றவைகளால் பாதிக்கப்படும்போதும், ஒரு

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

# இலக்கிய நயம்

குடிசையின் முற்றத்திலே ஒரு மரக்குற்றியின் மீது அமர்ந்து ஓலையில் எழுத்தாணியால் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். அப்போது முதியவர் ஒருவர் அங்கு வந்தார் வள்ளுவர் அவரை வரவேற்று அவரின் நலத்தை வினாவினார்.

சிறிது நேர அமைதியின் பின்னர் அந்த முதியவர் கேட்டார் -'ஐயரே இந்த உலகத்திலே நன்மைகளை விட தீமைகளே மிகவும் கூடுதலாக உள்ளதாக நான் உணருகின்றேன். இத்தீமைகளில் எல்லாம் மிகவும் கொடியது எது என்பதை தாங்கள் சொல்லியருள வேண்டும்.

பெரியவரே தாங்கள் உணர்ந்தது உண்மையே கொடியவற்றுள் கொடியது வறுமையே என்பது எனது கருத்தாகும்.

'ஐயரே வறுமையில் கொடியது வேறு எதுவும் இல்லையா?

வள்ளுவர் புன்னகை பூத்தார். அவருடைய அறிவு விழித்தெழுந்தது. உடனே இலக்கிய உணர்வும் சேர்ந்தெழுந்தது. வறுமையில் கொடியது வேறில்லை என்று சுவையாகச்சொல்ல வேண்டும் அவர் வாயில் இருந்து சொல் முத்துக்கள் ஒவ்வொன்றாகச் சொரிந்தன.



"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின் இன்மையே இன்னாதது"

வறுமையிலும் கொடியது யாதென்றால் வறுமையிலும்

வறுமையே கொடியது என்ன அருமை என்ன ஆழமான விளக்கம் என்ன சுவையின்பம்.

வறுமையிலும் கொடியது ஏதோ ஒன்று இருக்கிறது என்று சொல்லப்போவது போல் குறளின் முற்பகுதி தொடங்குகின்றது பின்பு யாரும் எதிர்பாராத வகையில் வறுமையிலும் கொடியது வறுமை என்று முடிகிறது.

முதியவர் அந்த முதுமையிலும் வள்ளுவரின் கால்களைத்தொட்டு கண்ணிலே ஒற்றிக்கொண்டார்.

வள்ளுவர் வறுமையே மிகவும் கொடியது என்பதற்கான காரணங்களை விளக்கினார்-

வறுமையானது ஒருவனுடைய சிறப்புக்களோடு அவனது வாழ்வு முழுவதையும் எரித்துவிடும் அந்த வகையில் நோக்கினால் தீயிலும் வறுமை தீயது என்று விளக்கி முடித்தார்.

'ஐயரே நெருப்பிலும் வறுமை கொடியது என்கிறீர்கள் அது எவ்வளவு அதிகம் கொடியது? என்றும் விளக்கியருள வேண்டும்."

'நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுயாதொன்றும் கண்பாடரிது"

இவ்வாறு பட்டென்று பதில் மொழி கொடுத்தார் வள்ளுவர். கிழவனார் திகைத்துப்போனார். நாங்கள் கூறுவதாயிருந்தால் நெருப்பினிலே உறங்கினாலும் உறங்கலாம். ஆனால், வறுமையில் உறங்கவே முடியாது என்றுதானே கூறியிருப்போம்? ஆனால் இதில் தீயிலும் வறுமையானது கொடுமையின் மிகுதிப்பாடு எவ்வளவு என்பதற்கு விளக்கம் இல்லாமல் இருக்கிறதே வள்ளுவருடைய கூற்றிலே அந்த விளக்கமும் இருக்கிறது.

எப்படி?

வள்ளுவர் கையாண்ட சொற்களை கூர்ந்து நோக்குங்கள். உறக்கத்தை குறிக்க இரண்டு வேவ்வேறு சொற்களை கையாண்டு இருக்கிறார். அச்சொற்களை ஆண்டதிலேதான் வள்ளுவரின் அறிவு நுட்பமும் திறமையும் விளங்குகின்றன.

அவை: துஞ்சல், கண்பாடு என்பன.

துஞ்சல், ஆழ்நிலை உறக்கத்தைக் குறிக்கும். கண்பாடு, மேனியிலே உறக்கத்தை (சிறுதுாக்கம்) குறிக்கும். இப்பொழுது குறளின் பொருளைப் பார்க்கலாம்-

நெருப்பிலே ஆழமாக - அமைதியாக உறங்குதலும் முடியலாம். ஆனால், வறுமையில் சிறிதேனும் கண் மூடலும் முடியாது நெருப்பிலே உறங்கலாமாம் வறுமையிலே கண் மூடவும் முடியாதாம்.

இப்பொழுது வறுமை நெருப்பைவிட எவ்வளவு அதிகம் கொடுமையானது என்று புரிகிறதன்றோ. இவ்வாறு கூற வள்ளுவருக்கல்லாமல் வேறு யாருக்கு முடியும் என்னே நுட்பமான சொல்லாட்சி.

த. றாஜினி

(ஆண்டு - 09
முத்தமிழ்வித்தியாலயம்
கோவில் புளியங்குளம்,
வவுனியா)

# வாசகர் உலகம்

இளைஞனுக்கு,

தங்கள் மார்கழிமாத இதழ் கண்டேன். பல தரமான விடையங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. இளைஞனை நான் வாசித்ததிலிருந்து.....

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்ற வண்ணை ஆனந்தன் அவர்களின் கட்டுரை சிறப்பாக இருந்தது. புலம் பெயர்ந்த தமிழன் இப்படியான கட்டுரைகளை வாசித்தாவது திருந்துகிறானா? பார்ப்போம்.

சீதை பத்தினியா? இராமன் ஏகபத்தினி விரதனா? இராமனை விட இராவணன் எவ்வளவோ மேலானவன் என்ற ஏகலைவன் அவர்களின் கட்டுரைக்கு, இணுவையூர் பவன் கணபதிப்பிள்ளை அவர்கள் மிகவும் சிறப்பாக ஆராய்ச்சி நடாத்தி ஏகலைவன் அவர்களுக்கு தக்க பதில் கொடுத்ததையிட்டு மகிழ்ச்சியே. ஆனால் இனியும் ஓர் எழுத்தாளர் எழுதுகோலை எடுத்து சீதை பத்தினியா? என்ற கேள்வியைக் கேட்டு ஆராய்ச்சி நடத்த வேண்டாம். அந்தப் பத்தினித்தெய்வத்தை இனியும் எழுதி கேவலப்படுத்த வேண்டாம். என்று எழுத்தாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இலக்கிய நயம் எனும் தலைப்பில் கம்பனைப்பற்றி மிகவும் நன்றாகவே இலக்கியம் பிழிந்துள்ளார் த. றாஜினி. சங்கரி தொடர் நவீனத்தில் கண்ணனைப் போல் சந்தேகப்படும் ஆண்கள் வாழும் வரை சங்கரி போல் பெண்கள் அழுது கொண்டு வாழவேண்டியது தானா? பெண் ஜென்மம் அழுவதற்கென்றே பிறந்ததோ? சங்கரிக்கு கொஞ்சம் தைரியத்தைக் கொடுங்கள் குஞ்சம்மா அவர்களே.

தமிழீழப்பெண்களை வம்புக்கு இழுக்கும் சுஜாதாவை காரசாரமாகத்தான் சாடியுள்ளார் மோகனராஜா அவர்கள். சுஜாதா கையிலும் "இளைஞன்" கிடைத்திருந்தால் இனிமேல் தமிழீழப்பக்கமே தலைவைத்துப்படுக்க மாட்டார் சுஜாதா!

செல்வி. பவானியின் கேள்விக்குரிய ஆசிரியரின் பதிலில் -இனிப்பெண்கள் தங்கள் கணவன்மார்களை ஆட்டிப்படைக்க முடியாது என்பதை குறிப்பிட்டிருந்தீர்கள். அப்படி அவர்கள் ஆண்களை ஆட்டிப்படைப்பதற்கு காரணமானவர்களே ஆண்கள் தான்! காரணம் -ஆண்கள் சீதனம் வாங்குவது தான்.

அடுத்து, தயா அவர்களின் கேள்விக்கு பதிலாக - செ.- பரராஜசேகரம் அவர்களின் பழமொழி ஒன்றை தந்துள்ளீர்கள். அதில் 'சேலை கட்டிய பெண்களை நம்ப வேண்டாம்" என ஒரு வசனத்தை உபயோகித்துள்ளீர்கள். நாம் சேலை கட்டி ஆண்டவன் சன்னிதானம் போய்வருகின்றோம். உங்கள் பதிலை வாசித்தபின்பு

தொடர்ச்சி 22 ம் பக்கம்...





# பெண்களுக்கு பொறுமையே பெருமை!

சமத்கார புலவர் – 'சி' சார்

புலவரிடம் ஒரு அன்பர், ''பொறுமை என்பது பெண்களுக்கு மிக முக்கியமா? ஆண்களுக்கு மிக முக்கியமா?'' என்று கேட்டார்.

இதற்கு புலவர் கூறிய விளக்கம் வருமாறு:-

பொறுமை ஆண், பெண் இருவருக்கும் முக்கியம் என்றாலும், அந்த குணம் பெண்களுக்குத்தான் தவறாமல் இருக்க வேண்டும். அதன் மூலம் எல்லாருக்குமே நன்மை உண்டு. பெண்களின் பெருமை மகத்தானது என்பதை சுட்டிக்காட்டவே, பூமியைத் தாங்குவதே பூமாதேவி என்னும் ஒரு பெண்தான் என கதை சொன்னார்கள். பூமியை புஜபல மிக்க ஒரு ஆண் கடவுள் தாங்கிக் கொண்டிருக்கிறார் என்று கதை சொல்ல முன்வரவில்லை.

அந்தர லோகத்தில் தேவர்களின் தலைவன் தேவேந்திரன், நெருப்பின் தலைவன் அக்கினி பகவான், காற்றின் தலைவன் வாயு பகவான் என்று வானுலகத் தலைவனாகவும், நெருப்பின் தலைவனாகவும், காற்றின் தலைவனாகவும் ஆண்களைப் படைத்து கதை சொன்னவன், பூமியை தாங்கும் தலைவியாய் ஒரு பெண்ணைத்தான் குறிப்பிட்டான். பொறுமையின் அடிப்படையான தாங்கும் வலிமை பெண்களுக்கே உண்டு. தொடர்ந்து ஒரு குழந்தையை அரைமணி நேரம் கையிலே தூக்கிக் கொள்ள ஆண் எரிச்சலடைவான். பெண்ணோ தொடர்ந்து பத்துமாதம் வயிற்றில் சுமந்ததோடு, குழந்தை வளரும் வரை இடுப்பிலும் சுமக்கிறாள்.

பொறுமை என்னும் அணிகலனை தரித்துக் கொள்ளும் பெண்ணால அந்தக் குடும்பம் மட்டுமல்லாது அந்த ஊரும் பல நன்மைகளைப் பெறும். பொறுமை அறியாத பெண்களால் ஆண்கள் வீண் ஆத்திரங்களுக்கு இரையாவார்கள். அதன் பலன், அவன் வெளியில் சென்ற இடமெல்லாம் கோபப்படுவான். தனக்கும், மற்றவர்க்கும் அதனால் தீங்கு இழைப்பான்.

பெண்களின் பொறுமை என்பது வெறுமனே அமைதியாய் இருப்பது மட்டுமல்ல. தங்கள் பக்கத்து வீட்டில் பலவித வசதிகள் பெருகிக்கொண்டு போகின்றன. நம் வீட்டுக்கு அந்த வசதி எல்லாம் இல்லையே என்கிற மாதிரி மனதை அலைக்கழிக்க விடாமலிருப்பதும் பொறுமை. இம்மாதிரி விஷயங்களில் பெண்களுக்கு மனம் அலைக்கழிய ஆரம்பித்துவிட்டால் பின்னர் வீட்டில் எப்போதும் தொண தொணக்க ஆரம்பிப்போம். அதனால் வீட்டுத் தலைவன் எரிச்சலின் எல்லைக்குப் போவான். வீட்டிலும் சிடுசிடுப்பான். வெளியே போயும் கடுகடுப்பான். அத்தோடு மட்டுமல்ல, எதையாவது செய்து பணத்தை தேடி மனைவியைத் திருப்திப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்திற்கெல்லாம் பலியாவான். பொறுமையின் பெருமையை புரிந்த பெண்கள் கணவனின் அமைதிக்கு வழிவிட்டு, அதன் பயனாய் வீட்டிலேயும், வெளியேயும் அவன் சாந்தமாக நடமாட வாய்ப்பினை ஏற்படுத்துவாள். எனவே பெண்களுக்கே பொறுமை மிக அவசியம்! என்றார் புலவர்.

## தெரிந்து கொள்ளலாமே!

1– இன்று உலகில் தனது வளர்ச்சியில் வேகத்தைக் கூட்டி வளரும் நகரம் மெக்ஸிக்கோதான்.

2– ரயில்வே அமைப்பு முழுவதும் மின்சாரத்தினால் இயக்கப்படும் ஒரே நாடு சுவிற்சலாந்துதான்.

3– அமெரிக்காவில் மட்டும் இதுவரை 56 பேர் மருத்துவ விஞ்ஞானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றிருக்கிறார்கள்.

4– உடல்நலத்தைக் கெடுக்கும் வெற்றிலைப் பாக்கு, மூக்குப்பொடி ஆகியவற்றை கடைகளில் விற்கக்கூடாது என்று வங்கதேசத்தில் சட்டம் போடப்பட்டுள்ளது.

5– அபிசீனிய நாட்டிலும், திபெத்திலும் சில ஆப்பிரிக்க நாடுகளிலும் உப்புக்கட்டிகளே பணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

6– முள்ளம்பன்றி மீன் என்று ஒருவகை. இம்மீன்கள் விஷமுள்ளவை. ஜப்பானியர்கள் தற்கொலை செய்துகொள்ள இந்த மீனை சாப்பிடுகிறார்கள்.


-தொகுப்பு:- எஸ்.பி. ராஜா-



## உலகிலேயே மிகப்பெரிய பூச்சி!

பல பூச்சியினங்கள் தினந்தோறும் அழிந்து வருகின்றன. இந்த நிலையில் உலகிலேயே மிகப் பெரிய பூச்சியினமான அக்ரிப்பா அழிந்துவிட்டதாக நினைத்திருந்தார்கள். சமீபத்தில் இது உயிருடன் இருப்பதற்கான சான்றுகள் தெரிய வந்துள்ளது. இதுதான் உலகிலேயே மிகப் பெரிய பூச்சியினம். இது 1939ல் காஸ்டாரிகா என்ற இனத்தில் முதன்முதலாக காணப்பட்டது. இதை இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் வைத்திருக்கிறார்கள். சமீபத்தில்தான் இது பார்வைக்காக காட்டப்பட்டது. இதை காட்டுபவர் மொராக் வுட் என்ற பெண்மணி. இப்பூச்சியின் நீளம் 12 அங்குலம். ஒரு இறக்கையிலிருந்து மறு இறக்கையின் நுனி வரையில் உள்ள அளவு ஆகும்.

# எதிரியில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்!



**இளைஞர்களே!**
**எதிர்ப்பைச் சந்திக்க அஞ்சுகின்றீர்களா?**
**அல்லது, எப்போதும் எதிர்ப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்களா?**
**உங்களுக்காக...**

**தோ**ளுரம் கொண்ட தோழனே!

நீ எப்போதாவது எதிர்ப்பைச் சந்தித்திருக்கிறாயா? இல்லை -எப்போதும் எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறாயா? தளர்ந்து விடாதே!

எதிர்ப்பு என்பது தடைக்கல்லல்ல; படிக்கல்.

வழவழப்பான பாதை உனது வசத்துக்கு வராது. உராய்வுகள் தேவை.

உராய்வுகள் - பாதத்திற்கு உதவிகள்.

ஆமாம் தோழனே!

எதிர்ப்புகள் - பிடிமானங்கள்.

எதிர்ப்பு என்பது உனது வேள்வியை அணைக்கும் மழையல்ல; நெய்.

எதிர்ப்பு என்பது உனது ரத்தத்தில் சுறுசுறுப்பு ஏற்றுகிறது; சூழ்நிலையைச் சுத்தரிக்கிறது.

"கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியை நான் படித்திருக்கிறேன். ஆனால், "எதிரியில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று என் தாத்தா சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

ஒருநாள் வேப்பமரங்களின் பக்கக்கிளைகளை அவர் வெட்டிக்கொண்டிருந்த போது "ஏன் அதை வெட்டுகிறீர்கள்?" என வினவினேன்.

"வெட்டிவிட்டாத்தானப்பா வெரசா வளரும்" என்று மோனகையோடு எனக்கவர் ஞானப்பால் ஊட்டினார்.

எதிர்ப்பு எப்போதும் இரண்டு பாஷை பேசும். அது பெரும்பாலும் அழிவு மொழி பேசும்; எப்போதாவது ஆக்க மொழியும் பேசும்.

எனவே எல்லா எதிர்ப்புகளையும் லட்சியம் செய்யவும் கூடாது; சில எதிர்ப்புகளை அலட்சியம் செய்யவும் கூடாது.

இளைஞனே! வலிமையின் வாரிசே!

உனக்கு சுயமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்னும் வேட்கையிருக்கலாம்.

நிலாவை போல் இரவல் வெளிச்சத்தில் வாழ்பவனாக இல்லாமல் சூரியனைப்போல் சுயமாக ஒளிவிட வேண்டும் என்ற துடிப்பு உனக்குள் வெடித்து வரலாம்.

அப்போது தான் உனது சொந்தமும், சுற்றமும் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் மூந்நூறு ரூபாய் வேலையை விட்டுவிடாதே என்று வேண்டுகோள் விடுக்கும்; உன்னைப் பைத்தியக்காரன் என்று பரிகசிக்கும்.

அந்த எதிர்ப்புகளைக் கண்டு நீ இடிந்து விடாதே. உலகத்தின் ஒவ்வொரு மாற்றத்தையும் இப்படியொரு கூட்டம் எதிர்த்துக்கொள்ள வந்திருக்கிறது.

அந்த அவநம்பிக்கையாளர்களை ஓதுங்கச் சொல்லி நீ உத்தரவு போடு.

பாவம் அவர்கள்!

கப்பலில் ஏறத் திராணியில்லாததால், கவிழ்ந்து போன கட்டு மரமே கடவுள் என்பவர்கள்.

நம்மில் பலருக்கு முப்பது வயதிலேயே வாழ்க்கை முடிந்து விடுகிறது; முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள்.

அதனால்த்தான் இங்கே நூற்றாண்டுகள் மட்டுமே முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

மனிதன் காலத்திற்குக் காலண்டர் கிழிப்பவனாகவே காலம் கழிக்கிறான்.

இளைஞனே! முடிவெடுப்பதற்கு முன்னால் யோசி; முடிவெடுத்தபின் யோசிக்காதே.

யோசிக்காமல் முடிவெடுப்பவன் பேதை.

முடிவெடுத்தபின் யோசிப்பவன் கோழை.

சில தற்காலிக சுகங்களுக்காக நிரந்தர லட்சியங்களை ஒத்தி போடுவது உதவாது.

இறைச்சித்துண்டுகளுக்கு உத்தரவாதம் உண்டு என்பதற்காகச் சிறுத்தைகள் கூண்டுக்குள் குடியிருக்கச் சம்மதம் தருவது போன்றது அது.

உனக்கு முழுநம்பிக்கை வந்துவிட்டது என்றால், முன் வைத்த காலை நீ பின் வைக்காதே!

இன்னொன்று சொல்வேன் இளைஞனே! எதிர்ப்புகளில் இரண்டு வகை.

சில எதிர்ப்புகளைக் கண்டு நீ சிரித்து விட வேண்டும்; சில எதிர்ப்புகளை நீ எரித்து விட வேண்டும்.

சிரிக்க வேண்டியவைகளை நீ எரிக்க நினைக்காதே; எரிக்க வேண்டியவைகளைக் கண்டு சிரித்துக் கொண்டிருக்காதே.

**(கவிஞர் - வைரமுத்துவின் "சிற்பியைச் செதுக்குகின்றேன்" என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து...)**

# ஐ.நா.சபையில் தமிழீழக் குரல்!

"உயர் திரு. அக்கிராசனர் அவர்களே, உலகத் தலைவர்களே" நமது தமிழீழம் போன்ற ஒடுக்கப்பட்ட தேசங்கள் இவ்வுன்னதம் வாய்ந்த சபையில் தங்கள் குறைகளைக்கூற முடியாதாயின் நாம் வேறு எங்கு செல்வது?


எனது பெயர் கிருஷ்ணா. இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையிலான பிரதேசமான தமிழ் ஈழம் என்னும் தேசத்தை சேர்ந்தவன். அங்கு 35 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த தமிழ்த்தேசத்தை அழிக்கும் முயற்ச்சியில் சிங்கள ஸ்ரீலங்கா அரசு தனது தமிழ் இனத்தை ஒழிக்கும் கொள்கைக்கமைய தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றது....." என்ற ஒரு பெரியவர் ஐக்கிய நாட்டுச்சபையின் மேசையில் 5. 10. 1978 ல் முழங்கியதும் 150 நாடுகளைக்கொண்ட பிரதிநிதிகளும் அன்றைய வழக்கமான கூட்டத்திற்கு தலைமை வகுத்த திரு. லிவியானோவும் பரபரப்படைந்தனர். பெரியார் பாவித்த ஒலிபெருக்கியும் காவலர்களால் தலைவரின் ஆணைப்படி துண்டிக்கப்பட்டது. எனினும் உரத்த குரலில் மெலும் தொடர்ந்தார்.

பிரதான ஒரு தேசமாக வாழ எமது சுயநிர்ணய உரிமையை பயன்படுத்த முன் வந்துள்ளோம். இத்தமிழ் பிரச்சனையால் விளையக் கூடிய ஆபத்தில் இந்திய கண்டத்தையண்டிய பிரதேசத்தில் அமைதிக்கும் பங்கம் விளையக்கூடிய ஆபத்தும் உள்ளது. உலகத் தலைவர்களாகிய நீங்கள் இப்பிரச்சனையில் தலையிட்டு தீர்வைக்காண முன்வராவிடில் ஸ்ரீலங்காவிலுள்ள இப்பிரச்சனை பாலஸ்தீனிய, சைப்பிறஸ் நாடுகளில் நிலவும் ஆபத்தான பிரச்சனையாக மேலும் உருவாகும். இவ்வுதவியை நாங்கள் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம். உங்களுக்கு நன்றி. அனுமதியில்லாமல் பேசியதுக்கு மன்னிப்புக்கோருகின்றேன். இவ்வுரை நாலு நிமிடங்களில் ஆங்கிலத்தில் ஆற்றப்பட்டதொன்றாகும்.

இவ்வுரையை அற்றி உலக மன்றத்தையே வியப்பிலாத்தியவர்தான் இப்பொழுது இங்கிலாந்தில் வசிக்கும் 75 வயதான பெரியவர் திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள். இந்தத் துணிகரமான செயலால் முதன்முதல் "தமிழ் ஈழம்" என்ற கோரிக்கைக்குரல் ஐ. நா. சபையில் ஒலித்ததென்றால் இதைவிட தமிழர்களக்கு வேறென்ன சாதுரியம் வேண்டும்.

ஆகவே, ஐ. நா. சபையின் பொன்விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் இது பற்றி அறியாது அன்று பாலகர்களாக இருந்த இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் அறிந்து கொள்ளவும், அன்று அறிந்தும் உணரா இருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவும், தமிழீழமே தமிழனின் தாகம் என்ற உண்மையை உணரவுமே இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. இந்த நிலையைப்புரிந்த கிருஷ்ணா வைகுந்தவாசன் யாழ்ப்பாண மண்ணில் பிறந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் படித்து 1994 ல் இலங்கையில் தமிழர்கள் ஆதிக்கம் செய்த அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து தொழிற் சங்கவாதியாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச்செயலானராக பதவி வகுத்த காலை, 1947 ல் நடந்த பொது வேலைநிறுத்தம் காரணமாக வேலையை இழந்தார். எனினும் இடதுசாரிக் கொள்கையுடைய திரு. வைகுந்தவாசன் "மக்கள் குரல்" என்ற ஆங்கில இதழை நடாத்தியும் அதே வேளை சட்டக்கல்லூரியில் படித்து சட்டவல்லுநராக வெளிவந்தபின் நீதிமன்றங்களில் கடமை புரிந்தார். பின்னர் சம்பியா நாட்டில் 6 வருடங்களாக நீதிவானாகவும், நீதியரசனாகவும் பணியாற்றிய பின்னர் இங்கிலாந்தில் 1977 ல் குடியேறினார். அங்கு வழக்கறிஞராக இன்னும் பணிபுரிகின்றார். இதுவும் அபிலாட்சைகளுக்கு உதவின. நியுயோர்க் நகரில் நடந்த வழக்கறிஞர்கள் சங்க மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட வாய்ப்பினை பயன்படுத்தி ஐ. நா. சபைக் கூட்டத்தொடர் நடந்தவேளையில் பார்வையாளர் பகுதியில்

தொடர்ச்சி 13 ம் பக்கம்...



சென்னையிலிருந்து - வட்டுக்கோட்டை பரராசசேகரம்

(சிறுகதை)

# தீர்வு

கீதாச்சந்திரன்

கடும்குளிர் எங்கும் வியாபித்திருந்தது. தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்திருந்த ருக்குமணி, அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். ஏதோ அவசரமான காரியம் ஒன்றிற்கு போகப் போறவளைப்போல் அவளுள் ஓர் படபடப்பு, மாறாய் சிறு சந்தோசம். ருக்குமணி அங்கும், இங்கும் நடந்து திரிந்த சத்தத்தில் தூக்கம் களைந்த ராசுக்கு அம்மாவின் நிலை பரிதாபத்தை விட சிரிப்பினையே தந்தது.

இன்று ஏன் அம்மா இப்படி அதிகாலையில் எழுந்துவிட்டார் என எண்ணியபோது சோசல் காசு எடுக்கும் நாள் ஞாபகம் வந்தது. அதை நினைக்கையில் அவன் மனமும் கனத்தது. சரியாக இருவாரம் முடிகிறது. இருவாரமும் அம்மா இப்படி அமைதியாகவே இருக்கிறார் யாரிடமும் கதை பேச்சு இல்லை. மௌனமே வாழ்வாகிவிட்டது.

ஊரானால் இன்நேரம் பக்கத்து கோயிலில் பூப்பறித்து மாலை தொடுக்கப்போயிருப்பாள். ஐந்து பிள்ளைகளுடனும், கூடப்பிறந்த உறவுகளுடனும் வாழ்ந்த அம்மா இன்று மௌனமாக, அதுவும் தீயினை மிதித்தவளின் நிலையில் பிள்ளைவீட்டில் வாழ்கிறாளே எனும் போது தன்னின் கையாலாகத்தனம் அவனையே சுட்டது. பாடசாலை முடிந்து நிரோஸ்சும், நானும், மனைவியும் என வேலை முடிந்து வீடு திரும்பும்வரை தனிமையே அவள் உறவு. சமையல்போக எஞ்சியநேரம் தொலைக்காட்சி பார்ப்பது, புத்தகங்கள் படிப்பது என காலம் கழியும், அக்கம் பக்கம் ஐயோ! என்றால் கூட யாருமில்லை. அவசரமான உதவிகள் என்றால் சுகாதார சேவையின் நம்பர் தான் அவளுக்குக் கடவுள் துணை. இன்நிலைக்கு நாட்டு நடப்பினைத் திட்டியபடி மறுபக்கம் திரும்பியவனை, கல்பனாவின் பார்வை சுட்டெரிப்பதாக இருந்தது.

உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இருபக்க இடியாம். அவன் நிலையும் அதுதான். மனைவி, அம்மா என்ற உறவுக்குள் எவர் சொல்வதை ஏற்பது என்றதே அவனுக்கு பெரிய தலையிடி. அம்மாவுக்கு குத்தரிசி வாங்குவதிலிருந்து மின்சாரப்பணம் வரை மாதச்சமரியில் உயர்கிறது, என மனைவி புறுபுறுக்கத் தொடங்கியதிலிருந்து வீடு நரகமாகவே தோன்றியது.

ருக்மணியின் சோசல் பணத்தில் அரைப்பங்கினை வாங்கினால், 100 பிராங் (சுவிஸ் - பணம்) சீட்டு கட்டலாம். மின்சாரக்காசினையும் சமாளிக்கலாம் என கள்ளத்தனமாய் கல்பனா எண்ணியதை யாரும் புரியவில்லை.

இருவாரமாய் இதை அம்மாவிடம் நான் சொல்லவில்லையே என்ற கோபம்தான் அந்தப்பார்வை. பத்து மாதம் சுமந்த கடனையே அடைக்க இந்த வாழ்வு போதாது. உட்கார வைத்து சோறுபோட நான், எச்சில் தனமாய் 200 பிராங் ஐ சாப்பாட்டுச்குத் தாங்கள் என்று எப்படிக்கேட்பது என்ற தயக்கம் என்னிடம். இதுவே எனக்கும், மனைவிக்கும் பிரச்சனையை நாளடைவில் வளர்த்தது. இதற்கு எப்படியும் முடிவு கான வேண்டும் எனும் உந்துதலில் எழுந்த நான், நேராக அம்மாவின் அறையினை தட்டி உட்புகுந்தேன். அழுகைதான் வரவேற்றது. உடம்புக்கு ஏதேனுமா என பதறியபடி நான் அணுகியதும், மேலும் உரமாக அழுகை வெளிப்பட்டது. கேள்விக்கும் குத்தலான பதில் 'உடம்புக்கு அல்ல, மனதுக்கு' என. ஏனனே கோபம், என அருகே உட்கார்ந்ததும் அம்மா எழுந்து விட்டாள். அவள் பதில் என்னை உறைய வைத்தது.

தம்பி நான் இன்னும் உன்னோடு கூடியிருந்தால் உனக்கும் பிரச்சனை, உன் குடும்பத்திலும் பிரச்சனை. அதைவிட சரசக்கா, பொன்னம்மாக்கள் போல் சோசல் அறையில் இருக்கப்போறன். கொஞ்சக்காசுதான் சோசல் என்றாலும் அதுபோதும்.



'மகனின் வீடு' என்று பெருமைப்பட்டு சூடு வாங்குவதைவிட, சோசல் வீடு, அநாதை என்ற உண்மையுடன் வாழலாம்.

இரவு நீயும், கல்பனாவும் உச்சக்கட்டமாய் பிரச்சனைப்பட்டது தெரியும். இனியும் இது தொடரவேண்டாம். கடைசி நேரம் அப்பா நிம்மதியாகப் போனார். நான் தனிமைக் குப்பயந்து வெளிநாட்டிற்கு வந்தேன். அது ரொம்பத் தப்பு. சுடு தண்ணி காலில் பட்ட வாழ்க்கை.


என் பணம் பாதியிலேயே உன் மனைவிக்கு கண். சோசல் பணம் என் உறவுகளுக்கு உதவுவது அவளுக்குப்பிடிக்கவில்லை. அதுதான் காரணம். ஊரின் நிலைமையில் அந்தப்பணமும் போகாட்டி அவர்களின் வாழ்க்கை என்னாவது? உனக்கு உலகமே மனைவி. எனக்கு யதார்த்தம் வாழ்வு. தம்பி உடலுக்கு அழகு பூட்டி பயனில்லை. மனதுக்கு பூட்டிப்பார். எவ்வளவு சந்தோசம் கிடைக்கும் என. உன் மனைவிக்கு அரைவாசிப்பணமும் தந்து, பிள்ளை பார்த்து சமைத்து, வீடு துப்பரவு செய்து, வார்த்தைகளின் இடிபாடுகளுக்குள்ளும் வாழ நான் விரும்பல்ல. தனிமையானாலும் அமைதி தரும் சோசல் வீடு சுகமானது என்று ருக்மணி முடிக்க, வார்த்தைகளின் சாட்டையடியலில் ராசு குறுகிப்போனான். வெட்கப்பட்டு நின்றான்.

அறையைவிட்டு போகையில் அப்பாவின் விருப்பப்பாடல் தான் அவன் செவிப்பறையில் ஒலித்தது.

அவ ர் அவர் - இருக்குமிடத்தில்
இருந்து கொண்டால்
எல்லாம் சவுக்கியமே
கருடன் சொன்னது - கூடவே
அனுபவமும் சொன்னது. ■

வாசகர்களிடமிருந்து
ஆரோக்கியமான
ஆக்கங்கள்,
அறிவியல் சம்பந்தமான
விடையங்கள்,
சிறுகதைகள் எதிர்
பார்க்கப்படுகின்றன.

-இளைஞன் குழு-




## முக்கனி

மா
பலா
வாழை

## முத்தமிழ்

இயல்
இசை
நாடகம்

## மூவேந்தர்

சேரர்
சோழர்
பாண்டியர்

## முச்சுடர்

சூரியன்
சந்திரன்
அக்கினி

## முப்பொருள்

பசு
பதி
பாசம்

## மும்மலம்

ஆணவம்
கன்மம்
மாயை

## ஐவகை நிலங்கள்

குறிஞ்சி
முல்லை
மருதம்
நெய்தல்
பாலை

## ஐவகைப் பாக்கள்

வெண்பா
ஆசிரியப்பா
கலிப்பா
வஞ்சிப்பா
மருட்பா

## ஐவகை இலக்கணம்

எழுத்து
பொருள்
சொல்
யாப்பு
அணி

## ஐம்பொறிகள்

கண்
மூக்கு
மெய்
வாய்
செவி

## ஐம்பெருங் குரவர்

தந்தை
மூத்தோன்
குரு
அரசன்
தேசிகன்

## பஞ்சமா பாதகங்கள்

கொலை
களவு
பொய்
கள்ளருந்தல்
குருநிந்தை

## ஐம்பூதங்கள்

நிலம்
நீர்
காற்று
நெருப்பு
ஆகாயம்

## பஞ்சபாண்டவர்

தருமன்
வீமன்
அருச்சுனன்
நகுலன்
சகாதேவன்

## காலங்கள் ஆறு

இளவேனிற்காலம்
முதுவேனிற்காலம்
கார்காலம்
குளிர்காலம்
முன்பனிக்காலம்
பின்பனிக்காலம்

## பொழுதுகள் ஆறு

வைகறை
விடியல்
நண்பகல்
மாலை
எற்பாடு
சாமம்

## அறுசுவை

இனிப்பு
உவர்ப்பு
புளிப்பு
கசப்பு
உறைப்பு
கைப்பு

## ஆறுபடை வீடு

பழனி
திருப்பரங்குன்றம்
திருத்தணிகை
திருச்செந்தூர்
பழமுதிர்ச்சோலை
சுவாமிமலை

## அறுவகைச் சமயம்

சைவம்
சாக்தம்
காணபத்தியம்
வைணவம்
கௌமாரம்
சௌரம்

## 16 வகைப்பேறுகள்

புகழ்
கல்வி
வலிமை
நன்மக்கள்
பொன்
நெல்
நல்லூழ்
நுகர்ச்சி
அறிவு
அழகு
பொறுமை
இளமை
துணிவு
நோயின்மை
வாழ்நாள்
வெற்றி

## நவதாணியம்

நெல்
பயறு
கடலை
உழுந்து
எள்ளு
கச்சான்
கௌப்பி
கொள்ளு
சோளன்

-தொகுப்பு-
**த. றாஜினி**
ஆண்டு - 09
கோவில் புளியங்குளம்
முத்தமிழ் வித்தியாலயம்
வவுனியா.



அமைதியை நிலைநாட்ட வேண்டுமானால் என்ன வேண்டும்? லெபனானில் உள்ள பெய்ருட்டில் "ஹோப் பார் பீஸ்" என்ற நினைவு கட்டிடம் இருக்கிறது. அங்குதான் சுவரிலேயே இப்படி சக்தி வாய்ந்த ஆயுதங்களை வைத்து பூசி இருக்கிறார்கள். இதை வடிவமைத்த சிற்பி ஆர்மென் பெர்னாண்ட்ஸ் என்பவர். யாராவது கலவரம் செய்தால் கட்டிடங்களில் இருந்து துப்பாக்கி குண்டுகள் சீறிவந்து கலவரக்காரர்களைக் கொல்லும் அமைதிக்கான நம்பிக்கை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

# யுத்த வெறியும் இன வெறியும்!

பாரிய படைப்பலத்தை மூர்க்கத்தனமாகப்பயன்படுத்தி யாழ் நகரையும் அதனையடுத்துள்ள சில பகுதிகளையும் சிங்களப் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சிங்கக் கொடிகளைப்பறக்கவிட்டு -இதனை ஒரு பெரிய வெற்றியாகக் கொண்டாடும் நடவடிக்கைகளும் இடம் பெற்றுள்ளன.

பிளவுபட்டுள்ள நாட்டை ஒருங்கிணைப்பதற்காகவே இந்த ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அரசின் ராணுவ நடவடிக்கையும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் பிரச்சாரங்களும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த எல்லாவகையிலும் உதவப் போவதில்லை என்பதையே காட்டுகின்றன.

ராணுவத்தால் சுமார் 10 வருடங்களின்பின்னர் யாழ் நகரை மீண்டும் கைப்பற்ற முடிந்துள்ளது என்பது உண்மைதான். ஆனால், பிரச்சனை இதனுடன் முடிவடைந்து விட்டது என்பது போலக்காட்டுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெறும் கேலிச்கூத்தாகவே உள்ளது. பட்டாசுகளை வெடித்து, சிங்கக்கொடிகளை ஏற்றிவைத்து நடத்தப்படும் வைபவங்கள் ஈழத்தையே சிறிலங்கா வென்றுவிட்டது என்பது போன்ற ஒரு மாயையை சிங்கள மக்களிடம் ஏற்படுத்திவருகின்றது.

சிங்கள இனவாதப்பத்திரிகைகள் இச்செய்திகளை மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துவருகின்றன. அரசாங்கத்தின் ஏனைய நடவடிக்கைகளைவிட, அதன் யுத்தம் தொடர்பான செய்திகளை இப்பத்திரிகைகள் வெளியிட்டுவரும் விதமும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை ஒரு பெரிய யுத்த வீரனாகச் சித்தரித்து வருவதும் தமிழர்கள் மீது சிங்கள அரசாங்கம் ஒரு யுத்தப் பிரகடனம் செய்துள்ளது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சிங்கக்கொடி!

யாழ்நகரின் இடிபாடுகளின் மத்தியில் கேணல் ரத்வத்தை கொடியேற்றி வைத்தபோது, அதனைப் பத்திரிகைகளும், அரச வெகுசனத் தொடர்பு சாதனங்களும் சித்தரித்த விதம் இந்நாட்டில் இனவாதம் எந்தளவுக்கு மேலோங்கிச் சென்றுள்ளதென்பதையே விளக்கியது. யாழ்ப்பாணத்தில் ஏற்றப்பட்டது "இலங்கையின் தேசியக் கொடி" என்று கூறும் மனப்பக்குவம் எந்த ஒரு "பொறுப்பு வாய்ந்த" தொடர்புசாதனங்களுக்கும் இருக்கவில்லை. யாழ் நகரில் சிங்கக்கொடி ஏற்றப்பட்டது என்றே வெகுசன தொடர்பு சாதனங்கள் சித்தரித்தன. தேசியக் கொடி ஏற்றப்பட்டதெனச் சித்தரித்தால், அது ஏதோ ஒரு வகையில் ஒற்றுமையை வலியுறுத்துவதாக அமைந்திருக்கும். ஆனால், சிங்கம் -சிங்களவர்களின் சின்னம். சிங்கக்கொடி யாழ் நகரில் உயரப்பறக்கின்றது எனக் கூறும்போது, தமிழர்களை, சிங்களவர்கள் வென்றுவிட்டார்கள் என்ற உணர்வே மேலோங்கும். இந்த உணர்வைத் தூண்டிவிடவே அரசும் விரும்புகின்றது.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு - தொட்டிலையும் ஆட்டிவிடும் நடவடிக்கைகளையே அரசு மேற்கொள்கின்றது. ஒரு பக்கம் இனத் துவேசத்தைத்தூண்டி விடுகின்றது. மறுபுறம் அதற்கெதுரான கருத்துக்களைத் கூறுகின்றது. சாதரண சிங்கள மக்கள்தான் இந்த இரட்டைவேடத்தை நம்புகின்றார்கள் என்றால், கொழும்பிலுள்ள தமிழ்த்தலைவர்கள் கூட.....!

## அரசியல் தீர்வு?

யுத்தத்திற்கு வழங்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தின் முன்னால், நாட்டின் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டும் என்ற பேச்சே எவ்வித முக்கியத்துவமுமற்ற தொன்றாகிப் போய்விட்டது. அரசியல் தீர்வுத் திட்டமென 'ஒன்றை' அரசாங்கம் முன்வைத்தபோது, அதற்கெதுராகப் போர்க்கொடி உயர்த்திய பல பிக்குகள் உட்பட இனவாதிகள் அனைவரும், அரசின் யுத்தப்பேரிகையில் இன்று மயங்கிப்போயுள்ளர்கள்.

இந்தப்போக்குக்கு ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீளக் கொண்டுவரவேண்டுமென்பதற்காக முன்னைய ஆட்சிக்காலத்தில் இயங்கிய - போராடிய பல பத்திரிகையாளர்களும் புத்திஜீவிகளும் கூட பலியாகியுள்ளார்கள். சிங்களப்பேரினவாதத்துக்கு எதிரான கருத்துக்களை கடந்த காலங்களில் முன்வைத்த புத்திஜீவிகள் பலர் இன்று தமது நிலைப்பாட்டை



யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியுள்ள படையினர் பனை மரங்களை வெட்டி இராணுவ காப்பரண்களை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாற்றிக்கொண்டுள்ளார்கள். சிங்கள இனவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பது பிரபாகரனுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதுக்குச் சமமானதென்ற அபிப்பிராயம் பல்வேறு மட்டங்களிலும் மேலோங்கி வருகின்றது.

யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது - அகதிகளுக்கு உணவு மற்றும் நிவாரணங்களை அனுப்புமாறு கோருவது -அத்தியாவசிப் பொருட்களுக்கான தடைகளை நீக்குமாறு கோருவது போன்றவையெல்லாம் புலிகளைப் பலப்படுத்துவதற்கான கோரிக்கைகளாகக் கருதப்படும் நிலை தோற்றம் பெற்றுவிட்டது. அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அகதிகள் நிலைபற்றி ஆராய்வதற்காக கொழும்பில் கூட்டிய மாநாடு இருதடவைகள் குழப்பப்பட்டது. இது புலிகளுக்கு ஆதரவான ஒரு மாநாடு எனக்கூறப்பட்டே அரச ஆதரவுடன் குழப்பப்பட்டது.



வெறிச்சோடிக்கிடக்கும் யாழ்நகர வீதிகளின் ஒரு பகுதி.

இனவாதம் அரச ஆதரவுடன் வளர்க்கப்பட்டுவரும் நிலையில், இனப்பிரச்சனைக்கான நியாயமான ஒரு தீர்வை அரசால் முன்வைக்கத்தான் முடியுமா?

## யாழ்ப்பாணச் சமர்!

சர்வதேச நிர்ப்பந்தங்களின் விளைவாக அதிகாரப்பரவல் திட்டமொன்றை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கம் பலத்த ஆரவாரங்களின் மத்தியில் வெளியிட்டது. தமிழ்மக்களின் நியாயமான அபிலாஷைகள் எதனையும் தீர்க்காத இத்திட்டத்தைக் கூட இனவாதிகள் ஏற்கத்தயாராக இருக்கவில்லை. ஆனால், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையையுமே எடுக்காத அரசு பதிலாக யுத்தத்தையே தீவிரப்படுத்தியுள்ளது.

அரசியல் தீர்வுத்திட்டமென்பது, யுத்தத்தைத்தொடர்வதற்கான ஒரு கவசமே என்பதை அண்மைக்கால சம்பவங்கள் தொட்டுக்காட்டியுள்ளன.

ஆனால், யாழ் நகரைக் கைப்பற்றியவுடன் புலிகளே இல்லாமற்போய்விடுவார்கள் என்றவகையில் அரசு மேற்கொண்ட பிரச்சாரங்கள் பிசுபிசுத்துப்போயுள்ளன. தாக்குதல் ஆரம்பமாகிய போதே -விடுதலைப்புலிகள் கெரில்லா தந்திரோபாய முறைப்படி பின்வாங்கித் தாக்குதலை நடத்தத்தொடங்கினார்கள். இதனால், தமது தரப்பில் ஆள் -ஆயுத இழப்புகளைப் புலிகள் பெருமளவுக்குத் தவிர்த்திருக்கின்றார்கள். அதேவேளையில் இத்தந்திரோபாயம் சிறிலங்கா படைகளுக்கு பலத்த இழப்புகளைக் கொடுத்துள்ளது. இதனால்த்தான் பலாலியிலிருந்து சுமார் 15 மைல்களே தொலைவிலுள்ள யாழ் நகரை அடைய படையினருக்கு 50 நாட்கள் சென்றுள்ளது. அதாவது சுமார் ஒரு மைலைக்கடப்பதற்கு மூன்று நாட்கள் சென்றுள்ளது. இவ்வளவுக்கும் முப்படைகளும் தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தியே இந்தத்தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள்.

முழு அளவிலான மரபு ரீதியான யுத்தமொன்றில் நேரடியாக நின்று சண்டையிடுவதற்கு போதிய ஆட்பலம் புலிகளிடம் இல்லாமற்போயிருக்கலாம். ஆனால், கெரில்லா யுத்தமென்பது புலிகளுக்கு கரும்பு தின்பதைப்போன்றது என்பது அரசுக்கு நினைவூட்டப்பட நீண்டநாட்கள் செல்லாது!

## கொழும்பிலிருந்து பார்த்தீபன்

9 ம் பக்கத்தொடர்ச்சி...

சில நாட்களாகச்சென்று அங்குள்ள சம்பிரதாயங்கள் விதிமுறைகள் ஒழுங்குகள் பற்றி உன்னிப்பாகக் கவனித்திருக்கிறார். இதனால் பல நாடுகளின் தலைவர்களின் அறிமுகமும் ஏற்பட்டதெனலாம். சிறிதுசிறிதாக தலைவர்கள் அமருகின்ற மண்டபத்திலும் நுளைந்து அவதானித்தார். இவையாவும் தான் உரையாற்றிய திகதியிலிருந்து 2 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றன. அன்றைய காலத்தில் இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவராக த. ஐ. வி. முன்னனிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்லிங்கத்தை முதல் இச்சபையில் வந்து பேரரைக்காலமா என்பதையும் ஆராய்ந்தார். செயல்பட முடியாத காரியம் என்றுணர்ந்தும், தாமே அழையா விருந்தாளியாக ஐ. நா. சபையில் நுழைந்து தமிழர்களின் இன்னல்களைக் கூறவேண்டும் என்று நினைத்ததின் விளைவே இம்முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் ஈழக் கோரிக்கைக் குரல் எழுந்ததெனலாம். இப்பேச்சு முடியுறும் வேளையில் காலங்களால் அப்புறப்படுத்த பின்னர் சட்டவல்லமையாலும் "நான் என்ன குற்றம் செய்தேன்" என்றளவுக்கு வாதம் புரிகின்றனர். அதிகாரிகளும் செய்வது என்ன என அறியாது அவரை மிகவும் கௌரவமாக வெளியே அனுப்பினர். குள்ளமாக உள்ள இலங்கைப்பிரதிநிதி எஸ். ஹமீது பின்னர் பேசிய பொழுது எனக்கு முன்னர் பேசியவர் எனது நேரத்தில் நாலு நிமிடங்களைத் திருடிவிட்டார் என்று கூறினார். உலக நாடுகள் யாவும் இந்நிகழ்ச்சியை கொட்டை எழுத்துக்களில் முதல் பக்கத்தில் தமது செய்தித்தாள்களில் வெளியிட்டன.

இப்பெரியாரை சென்ற 2 ஆண்டுகளில் மூன்றுமுறை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நல்லாரைக்காண்பதுவும் நன்றே என்ற முறையில் அவரை சென்னையில் உள்ள ஹோட்டலில் சந்தித்து என்னை அறிமுகப்படுத்தினேன். அன்று அவரின் ஐ. நா. சபை நிகழ்ச்சியை ஆவலுடன் விசாரித்து அறிந்தேன். பின்னர் ஒரு முக்கியமாகத் ஈழத் தமிழர்களுக்காக பாடுபடும் பெரியார் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டமும் நூல் வெளியீட்டு விழாக்களிலும் கண்டு அளவளாவினேன். மூன்றாவது முறையாக வேறொரு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பொழுது சந்தித்து அளவளாவினதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இவர் இன்னும் பல ஆண்டுகளாக வாழ்ந்து தமிழர் நலனுக்கான பணியைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.



-குஞ்சம்மா-

# சங்கரி

தொடர் நவீனம்... (7)

வீடு சரியான அமைதியாக இருந்தது. பிள்ளைகள் மூன்றும் படுக்கைக்குப் போய்விட்டிருந்தன. கண்ணனும் போய்ப் படுத்துவிட்டான். அம்மா எங்க எண்டு பிள்ளைகள் கேட்டிருக்கும். கண்ணன் ஏதும் சொல்லிச் சமாளிச்சிருப்பான். குசினிக்குள் போய்ப் பார்க்கிறாள், பிள்ளைகள் மூன்றும் பாணும் ஜாமும் பூசிச் சாப்பிட்டு விட்டுப் படுத்துட்டுதுகள் போல, குசினிக்குள் சாப்பிட்ட கோப்பைகள் எல்லாம் அப்பிடி அப்பிடியே போட்டுக்கிடந்தது. சங்கரி எல்லாவற்றையும் எடுத்துக் கழுவி அடுக்கி வைத்து விட்டு போர்வை ஒன்றை எடுத்துக் கொண்டு வெளி ஹோலில் உள்ள கவுச்சில் வந்து படுக்கிறாள்.

சங்கரிக்குத் தூக்கம் வரவில்லை. இப்ப வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தப் பொய்வாழ்க்கை அவளுக்குக் கசந்தது. தினம் தினம் நரகவேதனை. அடுத்தவங்களைப் போல ஏன் என்னாலயும் வாழ முடியாமல் இருக்கு என்று தினமும் தனக்குத் தானே கேட்டு கேட்டு மருகிப் போனாள். கண்ணனுக்கு இப்படி ஒரு சந்தேக வியாதி வருவதற்கு எது காரணம்? தனது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களை மெல்ல அசைபோட்டுப் பார்க்கிறாள்.

பேர்லினிலேயே பெரிய புடவைக் கடை சுஜாதா ரேடேஸ்தான். அங்கதான் சங்கரி வேலை செய்துகொண்டிருந்தாள். முதலாளி ஓர் இந்தியன். சங்கரியை தனது சொந்த மகள் மாதிரித் தான் வைத்திருந்தார். அங்க வேலை செய்து கொண்டிருந்த போதுதான் ராஜனுடன் பழக்கம் ஏற்பட்டது. தாய்க்கு உடுப்பு வாங்கவந்த ராஜன் சங்கரியின் அழகில் மயங்கி தினம் தினம் ஏதாவது ஒரு உடுப்பு வாங்க வரத்தொடங்கினான். அந்த வரவு சங்கரியின் மனதிலும் காதலை வளர்த்தது.

மாலை நேரங்களில் மணிக்கணக்காக உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் தெரியாமல் கூட ராஜனுடைய விரல்கள் அவள்மீது படாமல்தான் அவன் பழகிக்கொண்டிருந்தான். அந்த ஒன்றுதான் சங்கரியின் மனதில் அவனை ஒருபடி உயர்த்தி வைத்திருந்தது. நாட்கள் வேகமாகக் கரைந்து மாதங்களாகி ஒரு வருடத்தைத் தாண்டிவிட்டிருந்தது. சங்கரியின் சகோதரங்களுக்கு விசயம் தெரிந்து இருபது வயது முடியேல்ல அதுக்குள்ள உனக்குக் கலியாணம் தேவைப்படுகுதா என்று வாய்க்கு வந்தபடி பேசினார்கள். பின்பு சமாதானமாகி கல்யாணத்தைப் பற்றிக் கதைத்த போதுதான் பிரச்சனை உருவாகியது.

சீதனம் வாங்குவது மடமைத் தனம். சீதனப் பேயை அறவே அழிக்க வேண்டும் என்றல்லாம் காதலிக்கும் போது அறம் பாடியவன், கல்யாணப் பேச்செடுத்தவுடன் ஐம்பதினாயிரம் மார்க் ரொக்கமாகவும், இங்க ஓடித்திரிய ஒரு காரும், சிலோனில இருபது ஏக்கர் நிலமும் சீதனமாகத் தரவேண்டும் என்று கண்டிஷன் போட்டான். சங்கரி இடிந்து போனாள். இப்படியெல்லாம் ராஜன் கேட்பான் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம். சீதனம் கொடுப்பதற்கு சங்கரியின் சகோதரங்களும் தாய்தகப்பனும் ஓம் என்றுதான் சொன்னார்கள். ஆனால் சங்கரியால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காதலிக்கும் போது வேண்டாம் என்றவன் இப்போ வேணும் என்கிறான். நாளைக்கு இன்னும் வேணும் கொண்டு வா என்றால் என்ன செய்வது? சொன்னாலும் சொல்லுவான். வேண்டாம், பணத்துக்காகவும் பொருளுக்காகவும் கல்யாணம் கட்டுறவன் கடைசிவரைக்கும் அன்பாக இருக்க மாட்டான். சங்கரிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது. இரண்டு கிழமை லீவு எடுத்துப் போட்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தாள். கடலிலே குளித்துக் கொண்டிருக்கும் போது கடல் நீர் வற்றிப் போக தான்மட்டும் மணலில் தனித்து நிற்பது போல அவளுக்குள் ஒரு உணர்வு.

எத்தனை நாட்களுக்குத்தான் முடங்கிக் கிடப்பது? கடை முதலாளி வந்து ஆறுதல் சொல்லி, வேலைக்கு வந்தால் கவலைகள் மறந்து விடும். மற்றவர்களோடு கதைத்தால் உன் மனதில் உள்ள பாரம் குறைந்து விடும். இப்படி முடங்கிக் கிடப்பதால் இனிமேல் என்னத்தைச் சாதிக்கப் போகின்றாய்? எல்லாவற்றையும் மறந்துவிட்டு வேலைக்கு வா என்று கூறிவிட்டுப் போனார். அடுத்த நாளே சங்கரி வேலைக்குப் போகத் தொடங்கினாள்.

அதன் பிறகு ராஜன் கடைப் பக்கமே வரவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு கடிதம் வந்தது. அதில் தனது தாயாரின் கட்டாயத்தின் பேரில்தான் சீதனம் கேட்டதாகவும், விரும்பினால் இரண்டுபேரும் வேற ஒரு நாட்டுக்குப் போய் அங்க கலியாணம் கட்டி வாழுவோம் என்றும், இங்க இருந்தால் தனது தாயார் கடைசிவரைக்கும் சீதனம் வாங்காமல் கட்டி வைக்க மாட்டார் என்றும் எழுதியிருந்தான். சங்கரி ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். அவன் காதலிக்கும் போது வாங்கிப் பரிசாகக் கொடுத்த மணிக்கூட்டையும் ஒரு பவுண் சங்கிலியையும் பார்சல் பண்ணி, அத்துடன் ஒரு சிறு பேப்பரில் 'நான் உங்களை மறந்து விட்டேன். தயவு செய்து நீங்களும் என்னை மறந்துவிட்டு, வேறு ஒரு பெண்ணை உங்கள் தாயாரின் சொல்படி சீதனம் வாங்கி கலியாணம் செய்து சந்தோஷமாக வாழுங்கள்" என்று எழுதி அனுப்பி விட்டாள். அதன் பிறகு அவனிடமிருந்து எந்தப் பதிலுமே வரவில்லை. காலப்போக்கில் சங்கரியும் அவனை மறந்து போய் விட்டாள்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு சங்கரியின் வாழ்க்கையில் மீண்டும் மறுமலர்ச்சி துளிர் விட்டது. சுஜாதாரேடேஸ்"க்கு முன்னால் இருக்கும் இந்தியன் சாப்பாட்டுக் கடைக்கு சாப்பிட வரும் கண்ணன் இவளது மனசுக்குள் புகுந்து கொண்டான். படித்தவன் மாதிரித் தெரிந்தான். பளிச் சென்ற வெள்ளை சேட்டும் வெள்ளை ரவுசரும் அணிந்து மிடுக்காக வருவான். சாப்பிட்டுக் கொண்டே கண் வெட்டாமல் இவளைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

இவளாலும் அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஏதாவது காரணத்தை வைத்து வாசலில் வந்து வந்து அவனைப் பார்த்து விட்டுப் போவாள். இரண்டு மூன்று மாதங்களாக இப்படியே பார்வையால் பேசிக் கொண்டார்கள். உலகத்திலேயே இந்தக் காதல் பயிருக்குத் தான் அதிகம் நீரூற்றி வளர்க்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை. இரண்டு மனங்களிலும் கொஞ்சம் ஈரம் இருந்தால் போதும், பயிர் வேர் பரப்பித் தழைத்து வளர்ந்து விடும்.

சங்கரியும் கண்ணனும் இரண்டு வருடங்களாகக் காதலித்தார்கள். பிறகு சீதனமே வாங்காமல் இரண்டு பக்கத்துச் சம்மதத்துடன் சங்கரியை கைப்பிடித்தான். முதல் இரவு அவன் வேலை செய்த ஹோட்டலில் வெகு அமர்க்கலமாக நடந்தது. ஆரம்ப வாழ்க்கை இனிமையாக ஆரம்பித்தது. கண்ணன் இனிமேல் இல்லையென்ற அன்பைச் சொரிந்தான். அந்த அன்புக்கு முன் அவள் எதையுமே மறைக்க விரும்பவில்லை. அவள் செய்த ஒரே ஒரு தவறு அது தான்.

தன்னுடைய வாழ்க்கையில் ராஜனைச் சந்தித்ததையும், காதலித்ததையும் பின்பு சீதனம் கேட்டு கலியாணம் குளம்பியதையும் ஒன்று விடாமல் சொல்லிவிட்டாள். கண்ணனின் முகம் இருண்டது. அதன் பிறகு அவன் கேட்ட கேள்விகள்... அவன் உன்னைத் தொட்டவனே? எங்கங்கயெல்லாம் தொட்டவன்? எங்கெங்க எல்லாம் போய் வந்தனீங்கள்? காதலிச்சது மட்டுந்தானு அல்லது எல்லாமே நடந்து முடிஞ்சுதா?

வார்த்தைகள்... வார்த்தைகள்... அப்பப்பா அவனுடைய வார்த்தைகளில் முதல் தடவையாக அமிலத்தை உணர்ந்தாள். அதுவே அவளுடைய வாழ்க்கையின் அழிவுக்கு அத்திவாரம் என்பதை அவள் அப்போது அறிந்திருக்க வில்லை.

தொடரும்..




# பூனையும், எலியும்!

படத்தைப் பார்த்ததும் - பூனையும், எலியும் என்ன சமாதான ஒப்பந்தத்திற்கு தயாராகி விட்டார்களா என்று எண்ணத்தோன்றுதல்லவா?

அதுதான் இல்லை! பிராங்பேர்ட்டில் ஒருவர் வளர்த்துவரும் இந்த பூனை, தோட்டத்தில் இந்த எலியைப் பிடித்தது. வேட்டையாடி சாப்பிடுவதற்கு பூனை தயாரான போது -இவர்களுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, திடீரென ஒரு "சிநேகிதம்" — ஒரு அருமையான புகைப்படத்தை எடுப்பதற்கு வழி வகுத்துவிட்டது!

-ரஞ்சினிப்பிரியன்-

# சிலோன் சின்னத்துரையும், ஐரோப்பா ஐயாத்துரையும்!



சிலோன் சின்னத்துரை: வட்டிக்கு விட்ட காசையும், சீட்டுக்கட்டிய காசையும் சுத்திக்கொண்டு போட்டாங்கள் என்று சிரித்துக்கொண்டு சொல்லுறியள். எப்படி இவ்வளவு பணம் போயும் உங்களால் சிரிக்க முடியுது?

ஐரோப்பா ஐயாத்துரை: சுத்திக்கொண்டு போனது என்ர காசில்லை, சுத்தரத்தின்ர காசை.

சிலோன் சின்னத்துரை: ???!!!...

---

சி. சி: கலியாண வீட்டில் ஐயர் குனிஞ்சு, நிமிர்ந்து கஸ்டப்பட்டு மந்திரம் சொல்லுறார் ஏனென்று தெரியில்லை!

ஐ. ஐ: கஸ்டப்பட்டு உழைக்கிற காசுதான் நிலைக்கும் என்று சொன்னவங்களாம் அதுதான்.

---

சி. சி: என்ன ஐயர் கலியாண வீட்டு மந்திரங்களை குறைச்சு சொல்லி கெதியா தாலி கட்டச்செய்திட்டார்.

ஐ. ஐ: பேசின ரேட்படி காசு தராமல் குறைச்சு குடுத்திட்டினமாம். அதுதான் ஐயர் மந்திரங்களை குறைச்சிட்டார்.

---

சி. சி: என்னப்பா மாப்பிள்ளை தாலி கட்டின கையோட என்வெலப் கவரை எல்லாம் வாங்கி வைச்சுக்கொண்டு பொம்பிள்ளையை மணவறையில் விட்டுட்டு அவசரமாய் போறார்.

ஐ. ஐ: அவர் வேலை செய்யிற ரெஸ்றோரண்டில் வேலை கூடவாம் முதலாளி தொலைபேசி பண்ணினவனாம் அதுதான் அவசரமாய் ஓடுகிறார்.

-ரவி செல்லத்துரை, பாசல் - சுவிற்சலாந்து

# தேன் கூடு

# நீரென்ன பெரிய கொம்போ?

மனிதனுக்கு ஆசை எப்பொழுதுமே அதிகமாகிப் போவதுண்டு. இதனால் விளையும் அனர்த்தங்களோ அளப்பரியன. தம் செல்வங்களை அதிகரிக்க, இயற்கையின் செல்வங்களின் மீது மனிதர்கள் பேராசை வைப்பதால், விளைவுகளோ படுமோசமானவையாகி விடுகின்றன.

இன்றைய யுகத்தில் பல காட்டு விலங்கினங்கள் மனித வேட்டையால், அருகிக்கொண்டே போகின்றன. நாளாவட்டத்தில் நமது சமுதாயத்தின் எதிர்கால வாரிசுகளுக்குப் பல பட்சிகளினதும், பல மிருகங்களினதும் உருவங்களைப் படங்கள் மூலமாகவே காட்டும் துர்ப்பாக்கிய நிலைமை வந்தே தீரப்போகின்றது. (அதாவது இன்று 'ஜீராஸிப் பார்க்கில்' டைனோஸரஸ் மிருகத்தைப் பார்த்து வாய் பிளப்பது போல) அந்த அளவுக்கு, ஜெட் வேகத்தில் பல மிருகங்கள், மனிதனின் பேராசையால் தீர்த்துக்கட்டப்படுகின்றன.

சராசரி எடையோ 2, 200 றாத்தல். இது நிற்கும்போது தோள்வரையிலான உயரம் 5". காண்டாமிருகம் என்னும் காட்டின் பாரிய விலங்கைப் பற்றியே இங்கே சொல்ல வருகின்றோம். ஆபிரிக்க காடுகளில் சஞ்சரிக்கும் காண்டாமிருகங்களில் கூட இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று கறுப்புக்காண்டாமிருகம் என்றும், மற்றைய இனம் வெள்ளைக் காண்டாமிருகம் என்றும் அழைக்கப்படுகிறது.

எதையும் அறிய வேண்டும் என்ற ஆவல் சண்டை போடவேண்டும் என்ற வேகம் எளிதில் எச்சரிக்கை உணர்வை அடைந்து விடுவது ·இவையெல்லாம் கறுத்த இனத்திற்கே உரிய குணாம்சங்கள்! கண்பார்வை படுமோசமாக இருந்தாலும், இதனுடைய செவிப்புலனும், மோப்பசக்தியும் அபாரமானவை! தன்னால் காணமுடியாத எதிராளியைக்கூட மோப்பசக்தியால் அறிந்து, சரியாகக் குறிவைத்து தாக்குவதில் இந்தக்காண்டாமிருகம் படுகில்லாடி! அது ஓடும் ரயிலாக இருந்தாலென்ன, பறக்கும் பட்டாம் பூச்சியாக இருந்தாலென்ன திருவாளர் காண்டாமிருகம் அலட்டிக்கொள்வதேயில்லை! ஆள்தான் பெரிய ஆசாமியாயிற்றே. எப்படி ஓடி எதிராளியை முட்டி மோதுவார் என்று கலங்குகிறீர்களா? கவலையை விடுங்கள். மணிக்கு 35 மைல் வேகத்தில் பாய்ந்தோடக்கூடியவர் இந்தப்பயில்வான்!



புல் மேய்ச்சல் பிரியரான வெள்ளை இனக்காண்டாமிருகமும் குட்டியும்!

சரி, கறுப்பன் இப்படியென்றால் வெள்ளையினின் குணம் எப்படியோ? இவர் சமாதானப்பிரியர் (இன்னொரு சந்திரிகா). கறுப்பு இனத்திற்கு முரண்பாடான சுபாவம் கொண்ட இவர், உருவத்தில் கறுப்பைவிட இரண்டு மா .ங்கு பெரியவர். உலகின் டல்வேறு மிருகங்களுள், மூன்றாவது மிகப் பெரிய இனம் என்ற பெருமை இந்த வெள்ளை இனங்களையே சென்றடைகின்றது. (அதாவது தரை வாழ் மிருகங்களுள்) இதனுடைய தலை, அளவில் மிகப்பெரிதாக இருப்பது, இதனுடைய உடல் அமைப்பின் விசித்திரமான அம்சமாகும். (இதனுடைய தலையை மாத்திரம் சுமக்க நான்கு திடகாத்திரமான ஆட்கள் தேவைப்படுவதுண்டாம்). என்னதான் பெரிய உருவமானாலும், கறுப்பு இனத்தைப்போல, இதுவும் சுறுசுறுப்பில் குறைந்ததல்ல! பொதுவாக வெள்ளைக் காண்டாமிருகங்கள் காட்டில் மனிதன் தென்படும்போது, பீதியில் இன்னொரு பக்கமாக நாலுகால்ப்பாய்ச்சலில் ஓட ஆரம்பித்துவிடுகின்றன. எனினும் வெள்ளை இனங்களால் தாக்கப்பட்ட மனிதரின் தொகை கறுப்பைவிட அதிகரித்துள்ளது என்று ஒரு புள்ளிவிபரத்தில் காட்டப்பட்டுள்ளது. மனிதன் அதற்கு வேண்டிய மரியாதையைக் கொடுக்காததால் வாங்கிக்கட்டிக்கொண்ட சன்மானம் என்றே நினைக்கத்தோன்றுகிறது.

'எருமைப்புத்தி' இந்தக் காண்டாமிருகங்களையும் விட்டுப்போகவில்லை. சேற்றில் புரள்வதென்றால் இரண்டுக்குமே ஒரே கொண்டாட்டந்தான்! சேற்றில் அமிழ்ந்து கிடந்து புரள்வதில் ஆனந்த அக்களிப்பு ஏற்படுவதுண்டு இந்த மிருகங்களுக்கு! (பல 'பெரியவர்களுக்கு' சிலசில அற்ப சங்கதிகள் பெரும் களிப்பூட்டுகின்றன என்ற வேதவாக்கு நிஜந்தான் போலும்). இந்தச் "சேற்றுக்குளிப்பு" கூட வெறும் விளையாட்டுக்கல்ல என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்! எப்பொழுதுமே உடலை மொய்க்கும் ஈக்களின் கடித்தொல்லையில் இருந்து மீள்வதுக்கும், ஆபிரிக்க வெயிலில் வரண்டு போயிருக்கும் உடலைக் குளிர்மைப் படுத்தவும் இந்தச் 'சேற்றுக்குளிப்பு' பெரும் வரப்பிரசாதமாககி விடுகின்றது என்கிறார்கள்!

சரி, இனி ஒரு சின்னப்பிரச்சனை! வெள்ளையன், கறுப்பன் என்று இனம் பிரிக்கின்றோமே! எப்படி இனம் கண்டு கொள்வது? பெயருக்கேற்றபடி இரண்டும் வெவ்வேறு நிறங்கள். பிறகென்ன குழப்பம் என்று கேட்கிறீர்களா?

பெயர்கள்தான் அப்படி உள்ளதேயொழிய, உண்மையிலேயே இரண்டும் சாம்பர் நிறம் கொண்டவை! (பெயரிலே RED SEA, BLACK SEA என்று சொல்லப்பட்டாலும் இவைகூட அலைகள் ஆர்ப்பரிக்கும் நீலக்கடல் என்பது போல) ஆனால் இரண்டுமே வித்தியாசமான சாம்பர்

தொடர்ச்சி 22ம் பக்கம்...

# சிறுவர் உலகம்




## பெண்களை விரும்பும் மிருகங்கள்!

பெண்களைத்தான் பெரும்பாலான விலங்குகள் விரும்புகின்றனவாம். அதேபோல ஆண்களைவிட பெண்களே விலங்குகளை தங்கள் பிள்ளைகளைப்போல அதிகள் நேசிக்கிறார்களாம். ஆண்களுக்குக்கோபம் வந்தால் அடுத்த நிமிடமே "குழம்பு" ஆகி விடுவோம். பெண்கள் பக்கம் இருந்தால் நீண்ட நாள் உயிர் வாழலாம் என்று மிருகங்கள் நினைக்கின்றனவாம். விலங்குகளுக்கு 54 சதவிகித பெண்களின் ஆதரவு இருப்பதாக இங்கிலாந்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபரத்தில் தெரிய வந்துள்ளது. அவர்களும்தானே "இறைச்சி" ஆசை வந்ததும் விலங்குகளை குழம்பாக்கி விடுகிறார்கள்! இதை மறந்துவிடுகின்றனவே நன்றி கெட்ட மிருகங்கள்! என்கிறார்கள் ஆண்கள்!



குரங்குப் புத்தி கோணல் புத்தி என்பார்கள். குரங்கு கையில் பூமாலை கிடைத்தாலே பிய்ந்து போய்விடும். நாய்க்குட்டி கிடைத்தால் சொல்லவா வேண்டும்? என்று நினைக்கத் தோன்றும். ஹாம்ப்ஷயர் என்ற இடத்தில் உள்ள விலங்குகள் வளர்ப்பு மையம் ஒன்றில் உள்ள இந்த குரங்கின் பெயர் ஜிம்மி. மற்ற விலங்குகளிடம் மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளும் குரங்குகளைப் போல இல்லாமல் இந்த நாய்க்குட்டியைத் தூக்கி விளையாடும். இவை இரண்டும் விளையாடுவதில் மட்டும் அல்ல, குறும்புத்தனங்கள் செய்வதில்கூட ஒன்று போலவே ஈடுபடுகின்றனவாம்!

## ஒரு நாளைக்கு ஒரு ஆரஞ்சுப்பழம் சாப்பிடுங்கள்!



ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் சாப்பிட வேண்டும் என்பதை கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போது ஒரு நாளைக்கு ஒரு ஆரஞ்சுப்பழத்தை சாப்பிட வேண்டுமென்று இங்கிலாந்து ஆராய்ச்சி முடிவு கூறுகிறது. இவ்வாறு செய்தால் ஸ்ட்ரோக் எனப்படும் "முடக்கு வாதத்தை" முற்றிலும் விரட்டி விடலாம் என்கிறார்கள். இதிலுள்ள வைட்டமின் "சி" சத்தை அதிகம் எடுத்துக் கொள்ளும் முதியவர்கள்கூட ஸ்ட்ரோக்கால் வரும் மரணத்தை தள்ளிப்போடலாம்.

## இந்தப்படத்திற்கு தகுந்த வண்ணம் தீட்டுங்கள் பார்க்கலாம் மழலைகளே!



# செய்தி துளிகள்

## புத்த அவதார சிறுவனுக்கு கார் பரிசு!

திபெத்.

ஒரு காலத்தில் திபெத் இந்தியாவின் அண்டை நாடாக இருந்தது. சீனாவின் ஆக்கிரமிப்பால் அது சீன மாநிலங்களில் ஒன்றாக மாறியது. அதிலிருந்து சீனா விடம் திபெத்தியர்களுக்கு நிறைய வெறுப்பு. தற்போது திபெத் சீனாவுடன் இணைந்த (?) 30-வது ஆண்டு விழா அங்கு கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி புத்தரின் அவதாரமாக கருதப்படும் ஒரு திபெத்திய சிறுவனுக்கு சீனா ஆடம்பர கார் ஒன்றை பரிசளித்து இருக்கிறது. அப்படியாவது திபெத் மக்களின் கொந்தளிப்பை அமைதிப்படுத்த முடியாதா என்ற நப்பாசைதான் இதற்கு காரணம்.

## வகுப்பறையில் நிர்வாண திரைப்படம்!

நியூயார்க்,

அமெரிக்காவில் உள்ளது 125-வது எண் பள்ளிக்கூடம். இங்கே மழை நாளாக இருந்ததால் குழந்தைகளுக்கு வீடியோவில் அலாவுதீன் படம். போட்டு காட்ட ஆசிரியை எண்ணினார். வீடியோ கேசட்டை சொருகினார். பாவம் வால்ட் டிஸ்னியின் அலாவுதீன் படம் திரையில் வரும் என்று ஆவலுடன் இருந்தார்கள் குழந்தைகள். ஆனால் அங்கு வந்ததோ நிர்வாண உடலுறவு காட்சிகளை சித்தரிக்கும்படம். அதிர்ச்சியடைந்த ஆசிரியை உடனே வீடியோவை மூடிவிட்டார். பள்ளிக்கூடத்துக்கு எப்படி நிர்வாண படம் வந்து சேர்ந்தது என்று அதிகாரிகள் துளைத்தனர். அலாவுதீன் வீடியோவுக்கு பதில் தவறுதலாக அந்த கேசட்டை யாராவது வைத்திருக்கலாம் என்று கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

## நெருப்புடன் விளையாடிய விண்வெளி வீரர்கள்.!

கேப்கானவரல்.

அமெரிக்க விண்வெளி ஓடமான கொலம்பியாவில் உள்ள விண்வெளி வீரர்கள் புதுமையான ஒரு சோதனையில் . ஈடுபட்டார்கள். விண்வெளியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் மெருகு ஏற்றுவதற்கும், பூமியின் சுற்றுப்புற சூழலை காப்பதற்கும் இந்த சோதனை நடத்தப்பட்டது. வேறு ஒன்றுமில்லை. விண்வெளியில் எரிபொருளை கொளுத்தி அந்த நெருப்பு துளிகள் எப்படி எரிகின்றன என்று வேடிக்கை பார்த்தார்கள். இந்த நெருப்பு வீரர்கள் எதிர்பார்த்ததை விட நீண்டநேரம் எரிந்தது. பூமியில் எரிவதைவிட அத்துடன் இந்த தீச்சுவாலை கொஞ்சம் புதுமையாக வட்டவடிவமாக எரிந்தது. விண்வெளி களத்தில் நடந்த இந்த சோதனையை மிகவும் ரசித்ததாக அமெரிக்க வீரர் ஒருவர் , தெரிவித்தார். இந்த சோதனை மூலம் விண்வெளி கலங்களுக்கு இன்னும் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை . கண்டுபிடிக்க அமெரிக்கா எண்ணி உள்ளது.

## கற்பழிக்க முயன்றவரின் மர்ம உறுப்பு துண்டிப்பு!

டாக்கா.

வங்காள தேசத்தை சேர்ந்தவர் அயூப்அலி (வயது 35). இவரது பக்கத்து வீட்டுக்காரரின் மனைவி ஜூலேகா (வயது 30) என்பவர் மீது நீண்ட நாளாகவே அலிக்கு ஒரு கண். ஒரு நாள் ஜூலேகாவின் கணவர் வெளியில் சென்றிருந்த நேரம். இவர் அந்த பெண்மணியின் குடிசைக்குள் நுழைந்து ஜூலேகா கற்பழிக்க முயன்றார். ஜூலேகா அசரவில்லை. கட்டிலுக்கு அடியில் இருந்த ஒரு கத்தியை உருவி, மறுகணம் அயூப் அலியின் ஆண் உறுப்பை துண்டித்து எடுத்துவிட்டார். அதுமட்டுமல்ல வெட்டிய ஆண் உறுப்பை கொண்டுபோய் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டார். அயூப் அலி தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## 60 ஆயிரம் குழந்தை விபசாரிகள்!

மணிலா.

பிலிப்பைன்ஸ் நாட்டில் மட்டும் 60 ஆயிரம் குழந்தை விபசாரிகள் இருப்பதாக அந்த நாட்டின் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எர்னஸ்டோ எரேரா என்பவர் தெரிவித்து இருக்கிறார். இந்த குழந்தை விபசாரிகள் 5 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். பிலிப்பைன்ஸ் நாட்டு பெற்றோர்கள் பலர் குழந்தைகளை வற்புறுத்தி விபசாரத்தில் ஈடுபடுத்து வதும் தெரிய வந்திருக்கிறது. தற்போது குழந்தை களை விபசாரத்தில் ஈடு படுத்துபவர்களுக்கு மரண தண்டனை அளிக்க பிலிப்பைன்ஸ் அரசு திட்டமிட்டு வருகிறது.

## ஒரு ஆண்டாக குப்பைமேட்டில் கிடந்த சிறுமி பிணம்!

பிலடெல்பியா,

அமெரிக்காவின் பிலடெல்பியா பகுதியில் உள்ள தோட்ட பகுதியில் 2 சிறுவர்கள் நாயுடன் ஓடி விளையாடி கொண்டிருந்தார்கள். ஒரு குப்பை மேட்டின் அருகே ஓடியபோது பயங்கர அதிர்ச்சி. அங்கே 13 வயது சிறுமியின் உடல் புதைந்து கிடந்தது. இந்த சிறுமி ஒரு ஆண்டுக்கு முன் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவள் மட்டுமல்ல, அவளது வீட்டின் பின்புற கதவுக்கு பக்கத்தில் சில மீட்டர் தூரத்தில்தான் இவளது உடல் புதைந்து இருந்தது. ஏதோ குப்பையை வீசி எறிவது போல இவளை ஒரு ஆண்டுக்கு முன் யாரோ குப்பை மேட்டில் வீசி இருக்கிறார்கள்.

சந்தேகம் அடைந்த போலீசார் சிறுமி அமந்தாவின் வீட்டினரை குடைய ஆரம்பித்தனர். அமந்தாவின் தாயாரையும், தாயாரின் ஆண் நண்பரையும் துருவி துருவி விசாரித்தார்கள். சொத்து பிரச்சினை காரணமாக மகளை தாயே கொன்று வீசி இருக்கலாம் என்று போலீசார் சந்தேகப்படுகின்றனர்.

## பத்திரிகை வாங்கினால் இலவச பீர்!

தென்கொரிய நாட்டு பத்திரிகைகள் நடுவில் விற்பனையில் கடும் போட்டி நிலவுகிறது. எனவே புதிதாக வெளிவரும் பத்திரிகைகள் புதுமையான முறையில் சலுகைகள் அறிவித்து தாக்கு பிடித்து கொள்கின்றன. தற்போது தென்கொரியாவில் ஆண்களுக்கென்று புதிதாக ஒரு நாளிதழ் வெளிவந்துள்ளது. இந்த பத்திரிகை வாங்கினால் 4 கேன் பீர் இலவசம்.

இந்த பத்திரிகையின் விலை 92 ரூபாய். பீர் விலையை விட பத்திரிகை விலை சற்று அதிகம்தான்.

## தெரிந்து கொள்ளலாமே!

★ உலகின் மிகப்பெரிய தானிய, இறைச்சி அங்காடி அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள 'சிகாகோ' நகரில் உள்ளது.

★ கார்சிகா என்ற தீவு மத்தியத் தரைக் கடலில் உள்ளது. இங்குதான் மாவீரன் நெப்போலியன் பிறந்தார். மத்தியத் தரைக்கடலில் உள்ள 'எல்பா' என்ற தீவுக்குத்தான் அவர் முதன் முறையாக நாடு கடத்தப் பட்டார்.

★ 1200 அடி உயரத்தில் 102 மாடிகளைக் கொண்ட மிக உயர்ந்த கட்டிடங்களுள் ஒன்றான, 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ்' அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளது.

★ சீனப் பெருஞ்சுவரின் நீளம் ஆயிரத்து நானூறு மைல்கள். ஷி ஹவாங் (Shi Hwang) என்ற சீனச் சக்கரவர்த்திதான் இச்சுவரைக் கட்ட ஆரம்பித்தவர்.

★ திபெத்தில் உள்ள 'லாசா' என்ற இடத்தில்தான் உயரமான விமான நிலையம் அமைக்கப் பட்டுள்ளது.

★ அமெரிக்காவில் உள்ள மவுண்ட் ரஷ்மோர் அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பங்கள்தான் உலகிலேயே பெரிய சிற்பங்களாகும்

## புது மாதிரி கார்



ஜேர்மனியில் சாரதி இல்லாமல் கம்ப்யூட்டர் உதவியுடன் இயங்கும் காரை கண்டுபிடித்துள்ளார்கள். சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு இந்த புதிய தொழில் நுட்பம் பயன்படும். வளைவான பாதைகள், மூடுபனிகள் அதிகம் இருந்தாலும்கூட கார் சரியாக செல்லும். காரின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்டுள்ள லேசர் கருவி, சாலையை ஸ்கேன் செய்து விவரங்களை கம்ப்யூட்டருக்கு அனுப்பும். சாரதிக்குத் தேவையான தகவல்களையும் அனுப்பும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உருவாகும் போது இந்த கருவிகளே காரின் வேகத்தைத்தானாக குறைத்துவிடும். நெரிசல்களில் வண்டியை நிறுத்துவதும், வளைவுகளில் பிரேக் போடுவதும் இப்புதிய தொழில் நுட்பக் கருவி செய்யும். சாரதி ஸ்டியரிங்கை பிடித்துக்கொண்டிருந்தால் போதும்.

# கவிதைகள் உலகம்

இளைஞன் ஒரு
ஜனரஞ்சகமான
மாத சஞ்சிகை

## போர் மந்திரம்

எழும்பு, எழும்பு
விழித்தெழும்பு
தமிழே, தமிழே
வல்லமையை
தரித்துக்கொள்

பாரம்பரிய யாழ்நகரே
உன் போருடைகளை
தரித்துக்கொள்
வன்னிவள மாதாவே
உன் வளங்களை
போர்க் கருவிகளாக்கு

எழும்பு, எழும்பு
பலன் கொள்
உன் பூர்வ தலைமுறைகள்
எழுப்பினபடி எழும்பு

உங்கள் கண்களை
ஈழவிடுதலைக்காய் ஏறிடுங்கள்
தாயக பூமியை
உற்று நோக்குங்கள்
வந்த பகைகள்
புகை போல்
ஒழிந்துபோம், ஒழிந்துபோம்

தமிழ்க்குமாரத்தியே, குமரனே
உன் கால்க்கட்டுக்களை
கனவு மாயைகளை
களைந்து எறி

உங்கள் விடுதலைப்பாதைக்கு
தீவிரித்து நடவுங்கள்
நம் தேசியத்தலைவன்
வழி நடவுங்கள்
அவன் கொள்கைக்குரலுக்கு
செவி கொடுங்கள்

அகதியாகி விட்டோம் என
அஞ்சாதே, அஞ்சாதே
ஆயுதம் தரிக்க
அவன் வழியில்
சபதம் எடு!

ஈழத்து வளமே
எம்மினிய பூமியே
கம்பீரக் காடுகளே
முழங்கு, முழங்கு
சிறுமைப்பட்ட
எம்மின விடிவுக்காய்
நீ முழங்கு, நீ முழங்கு

-கற்கி, பிராங்பேர்ட்-

## கிழக்கேன் விடிகிறது?

உலகம் இருண்டு போச்சு
உண்மை மறந்து போச்சு
நீதி அழிந்து போச்சு
மக்களோ...
நிர்கதி நிலையுமாச்சு
ஆனால்...
நீதியில்லா உலகுக்கு
கிழக்கேன் விடிகிறது?
உலக நீதிச்சபையேன் கூடுகிறது?

பசிக்கு உணவில்லை
படுத்துறங்க இடமில்லை
பச்சிழம் குழந்தைக்கு
பால் இல்லை
நோய்க்கு மருந்தில்லை
மனிதவுயிருக்கு மதிப்பில்லை - இதை
தட்டிக்கேட்க ஆளில்லை
ஆனால்...
நீதியில்லா உலகுக்கு
கிழக்கேன் விடிகிறது?
உலக நீதிச்சபையேன் கூடுகிறது?

அகிலமெல்லாம் இன்று
அடக்குமுறைக்காறன் பையில்
அவன் நினைப்பெல்லாம்
மானிடத்தை
அழிக்கின்ற அணுஆயுதத்தில் கையில்
பாரெல்லாம் பறக்கின்ற விமானம், கப்பலின்
பாரமெல்லாம் அழிவு குண்டுகளின் பாரம்
ஆனால்...
நீதியில்லா உலகுக்கு
கிழக்கேன் விடிகிறது?
உலகசபையேன் கூடுகிறது?

அநியாயத்தை தடுத்திட
அதிகாரம் இல்லாசபைகள்
ஆள்வோனைத் தட்டிக்கேட்க
ஆண்மையில்லா தலைமைகள்
கூடியென்னபலன்?, கூடியென்னபலன்?

இவர்கள் குளிர் காய்ந்து
கூடிமகிழ்வதற்கா...?
கிழக்கு விடிகிறது...? கிழக்கேன் விடிகிறது?
கிழக்கேன் விடிகிறது? கிழக்கேன் விடிகிறது?

-வேலணையூர் பொன்னண்ணா-

## இனிதாக ஈழம் பிறக்கும்

தை பிறந்தால் வழி பிறக்கும்
தரணி எங்கும் வாழ்வு சிறக்கும் - எங்கள்
புலி வெல்லும் இனி பகை நீங்கும்
காலம் புது வாழ்வு காட்டும்

உழவர்க்கு உவப்பான தை மாதம்
உலகெலாம் சிறப்பான இம்மாதம்
இளையோர்க்கு இனிப்பான தை மாதம்
இனிதான வாழ்வுக்கு வழி காட்டும்

நெல் முற்றி வளமாகும் - தமிழர்
நெஞ்சத்தில் மகிழ்வேறும் தை மாதம்
இல்லம் உயர்வோடு வாழ
இனிதாக ஈழம் பிறக்கும்

பொங்கல் பொங்கிடும் மங்களம் தங்கிடும்
புலவர் பாடிடும் இனிதான இம்மாதம்
எங்கும் பறந்திடும் புலிக்கொடி - என்றும்
தமிழர் மனங்களில் பொங்கிடும் பொங்கல்!

-ம. உதயகுமார், திருநகர்- கிளிநொச்சி-

## இதயத்தில் இடமிருந்தால்..

பூவுக்கு இடந்தந்தாய்
கூந்தலில் பூவையே
பொன்னுக்கு இடந்தந்தாய்
மின்னிட பெண்ணே

மையுக்கு இடந்தந்தாய்
கண்களில் கன்னியே
மஞ்சலுக்கு இடந்தந்தாய்
கன்னங்களில் வஞ்சியே

மருதாணிக்கு இடந்தந்தாய்
உன் பளிங்கு நகங்களில்
கொலுசுக்கு இடந்தந்தாய்
கொஞ்சிட உன் விரல்களை

பொட்டுக்கு இடந்தந்தாய்
உன் அழகு நெற்றியில்
பட்டுக்கு இடந்தந்தாய்
உன் உடலைச் சுற்றியே

பாவையே வெற்றிடமாயிருக்கும்
உன் இதயத்தில்
எனக்கு கொஞ்ச
இடந்தாவேன்.

-மீரா, ஆவரங்கால்-

## சுற்றம்

பொன் பொருள் உள்ளவரை கூடவரும்
இல்லாத வேளை எட்டி உதைக்கும்
நேருக்கு நேரானால் வாரியணைக்கும்
காணாத போது புறம் கூறும்
உதவி வேண்டி உருகி நிற்கும்
தேவை முடிந்தால் மறந்து போகும்
வாழ்வில் இயன்றவரை பிரிந்திருக்கும்
மரணத்தினால் சிலசமயம் இணைந்திருக்கும்.

-கீதாச்சந்திரன், பாசல் - சுவிஸ்-

## இளைஞர்களே!

"கடுமையான முயற்சி வெற்றியைத் தரும்" என்ற வாசகத்தை மனத்தைச் சீர்செய்து அதில் பயிரிட்டு விருத்தி செய்துவர மறந்து விடாதீர்கள். தன் னம்பிக்கை மிக்க மனிதர்களே சாகசம் புரிந்துள்ளனர்.

—என். வி. பீல்.

'கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்'
வருடம் - 2 குழந்தை - 20 தை - 1996



# புத்திசாலி மனைவியைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

புத்திசாலி மனைவியைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

-ஜெயக்குமார், ஜேர்மனி-

மிகவும் சிரமமான காரியம். காரணம் - அதிகமான தமிழ்ப்பெண்கள் திருமணத்திற்குப் பின்பு தான் தங்கள் புத்திசாலித்தனத்தையே காண்பிக்க ஆரம்பிக்கிறார்கள்.
ஒரு சம்பவம் -
கணவன் வெளியூர் புறப்பட்டான். மனைவி கணவனிடம் தான் ஆசையோடு வெகுநாட்களாக கேட்டுக் கொண்டிருக்கும் தோடுகளை இம்முறையாவது வெளியூரிலிருந்து வரும் போது வாங்கிவர வேண்டும் என கேட்டுக் கொண்டாள்.
வெளியூர் சென்றிருந்த கணவன் தான் வந்த வேலை காரணமாக இரண்டு, மூன்று வாரம் அங்கு தங்கியிருந்ததால் கணவனின் நலம் விசாரிக்கும் சாக்கில் தன் விருப்பத்தையும் நினைவுப்படுத்தி கீழ்க்கண்டவாறு அந்த மனைவி கடிதம் எழுதினாள்.
நான் மிக விருப்பத்"தோடு", திரும்பத் திரும்ப ஏக்கத்"-தோடு", தங்களிடம் கேட்டதை தாங்களும் பிரியத்"-தோடு", என் மீதுள்ள பாசத்"தோடு", அன்பு கலந்த நேசத்"தோடு", எதிர்பார்த்து தங்கள் வரவுக்காக இன்முகத்"தோடு" காத்திருக்கிறேன்.

இப்படி யாராவது புத்திசாலிப்பெண்ணாப் பார்த்து காதலிங்க ஜெயக்குமார்!

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழீழத்தில் தங்கள் உடன்பிறப்புகளை பட்டினியில் வாட வைத்து விட்டு, இங்கே அவர்கள் தங்கள் பணத்தை வட்டிக்கு கொடுப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

-நிரஞ்சன், ஜேர்மனி-

ஒரு குட்டிக்கதை ஞாபகத்திற்கு வருகிறது -
அரிச்சந்திரன் சுடலையை காத்துக்கொண்டிருந்த போது, அந்த சுடலைக்கு ஏராளமான பிணங்கள் கொண்டு வரப்படுவதைக் கண்டான்.
எந்தப்பிணத்தைப் பற்றியும் அவன் விசாரிப்பதில்லை. கூலியை மட்டுமே வசூலித்தான். ஒரு பிணத்தைப் பார்த்ததும் அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் போல் தோன்றியது.
பிணம் துாக்கி வந்தவர்களிடம் கேட்டான் -
"அய்யா... இது யாருடைய பிணம்?"
"இந்த ஊரிலுள்ள பணக்காரர்களில் இவரும் ஒருவர். வட்டிக்குப் பணம் கொடுப்பதே இவரது தொழில்"
அரிச்சந்திரன் அமைதியாகத் தலையை அசைத்தான். பிணத்திற்கு நெருப்பு மூட்டிவிட்டு அவர்கள் சென்றார்கள்.
சிறிது நேரத்தில் நெருப்பின் வேகத்தால் நரம்புகள் இழுக்கப்பட்டு பிணம் எழுந்து உட்கார்ந்தது. அரிச்சந்திரன் கத்தினான்.
"வட்டி வசூலாகிவிட்டது"
பிணம், மீண்டும் படுத்துக் கொண்டது.

உயிரற்ற பிணத்தின் நிலையே இப்படியென்றால், மனிதனின் மனம் எங்கேயுங்க பட்டினியைப்பற்றி நினைத்துப்பார்க்க போகிறது?

பெண் புத்தி பின் புத்தி என்கிறார்களே, இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் செயல்கள் - இதில் பின்புத்தி விளைவுகளா?

-சந்தோஷம்மா, பிராங்பேர்ட்-




சரியாகத்தான் சொன்னீர்கள். ஆனால், பின்புத்தியல்ல. சந்திரிகாவுக்கு பின் இருந்து ஆட்டுவிப்பவர்களின் புத்தி. (சிங்கள பேரினவாதிகள்)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவுக்கும் என்னங்க ஒற்றுமை, வேற்றுமைகள்?

-சந்தோஷம்மா, பிராங்பேர்ட்-



ஒற்றுமை - தமிழீழ எதிர்ப்பு
வேற்றுமை - ஊழல்கள்.

இந்த ஐரோப்பாவில் நேற்றுவரை நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தவர்கள், இன்று வந்த மனைவிகளால் நாளை கடும் விரோதத் தன்மை கொண்டவர்களா மாறிவிடுகிறார்கள். அப்படி அவர்களை மாற்றிடும் முந்தானையின் சக்தி என்ன?

-கீதாச்சந்திரன், பாசல் - சுவிற்சலாந்து-

முந்தானையின் சக்தி...?

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" (திருக்குறள் - 148)

திருவள்ளுவர் வாழ்ந்த அந்தக்காலத்திலேயே அடுத்தவன் பெண்டாட்டியை பிடிக்கிற வழக்கம் இருந்திருக்குப் போல. அதனால்த்தான் வள்ளுவர் இப்படி எழுதியிருக்கிறார்.
(பின்குறிப்பு: இது உங்க கேள்விக்கான பதில்தானுங்க)

பல ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை வெளிநாட்டுத்தமிழர்களாகிய நாங்கள் மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவதால் ஏதாவது பலன் கிடைக்குமா?

-திருமதி. சற்குணசிங்கம், பிராங்பேர்ட்-

கடந்த மாதங்களில் யாழ்ப்பாணம் மீது தாக்குதலை நிறுத்தக்கோரியும், அப்பாவிமக்கள் படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்து சென்னையில் பல அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்ட கண்டன ஊர்வலங்களை நடாத்தியதை சென்னைப்பத்திரிகை சஞ்சிகைகளில் படித்தேன். இது வரவேற்கக்கூடியதும் அதே வேளை சிங்களவனே பார்த்து சிரிக்கும் படியாகவும் இந்த ஊர்வலங்கள் நடந்தன.
ஆம், தி. மு. க. ஒரு நாள் ஊர்வலம்!, பாட்டாளி மக்கள் கட்சி வேறு ஒருநாள் ஊர்வலம்!, ம. தி. மு. க. இன்

னொரு நாள்!, திராவிடக் கழகம் மற்றொருநாள்!

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு அளிக்கவாவது தமிழர் ஒன்று படக்கூடாதா?

ஐரோப்பாவில் வாழும் ஈழத் தமிழர்களாகிய நாமும் சென்னைத்தமிழர்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்களல்ல என்பதை அன்மைக்காலங்களில் காட்டி வருகின்றோம்.

ஆம், தமிழ் மன்றங்கள், இந்து மன்றங்கள், தமிழர் ஒன்றியங்கள்... இவைகள் கூட வேவ்வேறான நாட்களில்தானே ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை இங்கு நடாத்திக் கொண்டிருக்கின்றன!

இப்படியே போனால் பலன்...?

நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஏமாந்து போனேன். இப்பொழுது என்னை ஒரு பெண் காதலிக்கிறாள். அதற்கு நான்...?

-யோ. உதயன், சூரிச்-சுவிற்சலாந்து-

**பிறர் உழைப்பில் சாப்பிடுவதையா, சுயமாக உழைத்துச் சாப்பிடுவதையா விரும்புகின்றீர்கள்?**

**ஏன் இதை கேட்கிறேன் என்றால் -**

**காதலிக்கப்படுவது என்பது: அதிர்ஷ்டம்!**

**காதலிப்பது என்பது: உழைப்பு!**

**(நிச்சயமாக உழைத்துச் சாப்பிடுவதைத்தான் விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன். -ஆ-ர்-)**

தாய் நாட்டை மறந்து ஐரோப்பிய நாகரிகத்தை பின்பற்றுபவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை...?

-இ. உதயகுமார், ஜேர்மனி-

முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழர்களுடைய நிலையைப் பற்றி இப்படிச்சொல்கிறார் -

* தமிழனுடைய நாடு படையெடுப்பால் இழக்கப்பட்டது.

* தமிழனுடைய நூல்கள் கடல் நீரால் அழிக்கப்பட்டது.

* தமிழனுடைய கல்வி பிறமொழியினால் ஒழிக்கப்பட்டது.

* தமிழனுடைய ஒற்றுமை ஜாதியால் பிரிக்கப்பட்டது.

*** தமிழனுடைய உரிமை உபாயத்தால் ஒடுக்கப்பட்டது.**

*** தமிழனுடைய பதவி வஞ்சனையால் கவரப்பட்டது.**

*** தமிழனுடைய வீரம் உபதேசத்தால் அடக்கப்பட்டது.**

**நீங்கள் குறிப்பிட்ட 'இதுகள்' இருக்கும்வரை-விசுவநாதம் அவர்கள் சொன்னது தொடரும்...!**

எப்பொழுதுமே நாங்கள் கேள்வி கேட்டு, நீங்கள் பதிலளிக்கிறீர்கள். வித்தியாசமாக நீங்கள் கேள்வி கேட்டு நாம் "புத்திசாலித்தனமாக" பதிலளிக்க விரும்புகின்றோம். ஒரு கேள்வி கேளுங்களேன்?

-வாசகன், ஜேர்மனி-

நல்ல யோசனையாகப்படுவதால் ஒவ்வோரு மாதமும் ஒவ்வொரு கேள்வி கேட்கவிருக்கின்றேன். எங்கே தங்கள் புத்திசாலித்தனத்தை காட்டுங்களேன் பார்க்கலாம். (எல்லா வாசகர்களும் இதில் பங்குகொள்ளலாம். வரும் சரியான விடைகளில் குலுக்கல் முறையில் ஒன்றைத்தேர்ந்தெடுத்து ஒருவருக்கு 10 DM பரிசு காத்திருக்கிறது. 15.01.96 முன்னதாக எமக்கு அனுப்பிவைக்கப் படவேண்டும்) -ஆசிரியர்-

**ஒரு நாட்டு அரசனிடம், ஒரு சிற்பி தான் செய்த மூன்று ஒரே மாதிரியான சிலைகளைக் கொண்டுவந்து-"இவைகளில் எந்த சிலை உயர்ந்தது?" என்று கேட்டார்.**

**மூன்றும் ஒரே மாதிரியான சிலைகளாக இருந்தது. எவ்வளவு ஆராய்ச்சி பண்ணியும் அரசனால் எந்தவொரு வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.**

**கடைசியா மந்திரியிடம் ஒரு குச்சியைக்கொண்டு வரச் சொல்லி ஒவ்வொரு சிலைகளின் காது வழியாகவும் குச்சியை நுழைத்தார்.**

**ஒரு சிலையில் குச்சி இன்னொரு காது வழியாக வந்தது. ஒரு சிலையில் வாய் வழியாக வந்தது. ஒரு சிலையிலே மட்டும் வெளியே வராமல், முட்டி உள்ளேயே போய் நின்றது. அரசன் இதுதான் உயர்ந்த சிலை என்று சொன்னார்.**

**என்ன காரணத்துக்காக மூன்றாவது சிலை உயர்ந்தது என்று அரசன் தேர்ந்தெடுத்தார்?**

**இதுதான் இந்தமாதத்துக் கேள்வி. என்ன... எழுதுகோலை எடுத்து விட்டீர்களா?**

தமிழனுக்கு எப்போது தான் விடிவு கிடைக்கும்?

-பாலகாந்தன், லண்டன்-

**விரைவில்...!**

*** தமிழனால் தமிழன் அழிந்தான்**

**என்பது நமது நேற்றாக இருந்தது.**

*** தமிழனால் தமிழன் அழிந்துகொண்டிருக்கிறான்**

**என்பது நமது இன்றாக இருக்கிறது.**

*** தமிழனால் தமிழன் மீட்கப்பட்டான்**

**என்பது நமது நாளையாக இருக்கட்டும்.**

**-காசிஆனந்தன்-**

நம் மூதாதையார் தம் பெற்றோரை ஆச்சி, அய்யன் எனக்கூறி அம்மா, அப்பாவாக மாறி தற்போது மம்மா, பப்பா என்கிறார்களே... எங்கேயுங்கே போய் முடியும்?

-காயத்திரி, பிராங்பேர்ட்-

நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிராங்பேர்ட் நகரிலேயே நடந்த ஓர் உண்மைச்சம்பவம் -

அந்தக்குடும்பம் கிட்டத்தட்ட 15 வருடங்களாக இங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு 13 வயதில் ஓர் பெண்ணும் உண்டு. ஆங்கில மொழியின் மேல் கொண்ட காதலால் அவர்களுக்கு கனடாவுக்குச்சென்று குடியேற நீண்டகால ஆசை. முதலில் தந்தை கனடாவுக்குச்சென்று, பின்பு மனைவி பிள்ளையை அங்கழைக்கும் எண்ணத்தோடு அவர் கனடாவுக்குச் சென்றார். மனைவி பிள்ளையை கூப்பிடும் முயற்சிகள் தாமதமாகியது. தொலைபேசியில் இவர்களுடன் தொடர்பு கொள்ளும் செலவு அதிகம் என்றபடியால், கடிதத்தில் தொடர்பு கொண்டு வருவார்.

இங்கேதான் பிரச்சனையே ஆரம்பம். 13 வயது மகளுக்கு தமிழில் கடிதம் எழுத வராது (தெரியாது). அதனால் அந்தச்சிறுமி தகப்பனுக்கு கடிதம் எழுதினாள். தமிழில்த்தான்! ஆனால், கடிதம் எழுத உபயோகிக்கப்பட்ட மொழி ஜேர்மன் மொழி! என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

ANPIN APPA! NAN NALLA SUKAM. . . . .

இப்படித்தான் அந்தச்சிறுமி கடிதம் எழுதினாள். எங்கேயுங்க போய் முடியும் என்று கேட்டிருந்தீர்கள். என்னைப் பொறுத்தவரையில் இதுதான் முடிவு என்று நினைக்கிறேன். இதற்கு மேல் என்ன இருக்கிறது?

## சோதரனே இன்னும் சோம்பல்தானா?

*எந்தன் இளைஞ சமுதாயமே!*
*இன்னும் என்ன தூக்கம் தானா?*
*எங்கள் இனத்தின் அவல நிலை*
*உந்தன் விழியில் படவில்லையா?*

*கடனைப்பட்டு காசைக் கட்டி*
*கடல் கடந்து வரும் வழியில்*
*கற்பிழந்து, பலகதை சுமந்து*
*கறையாகிப் போயிட சம்மதமா?*

*கொட்டிடும் பனியில் அடிமைபோல*
*கூலி கொள்ள இழி வேலைசெய்து*
*ஓட்டிடும் என ஒதுங்கிடும் நிறவெறி*
*மக்களிடை வாழ சம்மதமா?*

*காதல் கொண்டு கனவு தன்னில்*
*காலத்தை ஓட்டிடத்தான் முடிவா?*
*வீறுகொண்டு இணைந்து நின்று*
*போரிடும் எண்ணம் எழவில்லையா?*

*தாயகத்தை மீட்கவென்று உன்*
*தம்பிகள் போகிறார் தெரியலையா?*
*காவியமாய் அவர் போகையிலே - நீ*
*கானலன்றோ வெட்கம் இல்லையா?*

*சுதந்திரக்காற்றை சுவாசிக்க என்*
*சோதரனே இன்னும் சோம்பல்தானா?*
*நிரந்திரமில்லா வாழ்க்கையிலே - உயர்*
*நிலையினை அடைந்திட எண்ணவில்லையா?*

**-ஜெயச்செல்வி செல்வரட்ணம், கனடா-**

## ஓ... இளைஞனே!

கேட்க நினைத்தால்...
மீன் வேண்டும்
என்று கேட்காதே...
தூண்டில் வேண்டும்
என்று கேள்!

-ஜப்பான் பழமொழி-

"இளைஞனால் உலகில்
ஒன்றிணைவோம்!"

ELAIGNAN TAMIL MONTHLY
Largest Circulation in Europe
இளைஞன்
- மாத இதழ் -

முகவரி:
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel & Fax: 069/ 70 44 39

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: Artist SEGAR

ஆசிரியர்: ஓவியர் சேகர்

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
12 மாதம்: 30 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்
**சுவிற்சலாந்து**
P. சந்திரன்
Haupt str. 54
4127 Birsfelden
Basel

**பரீஸ்**
ரமணன் வீடியோ பலஸ்
7, Rue Perdonnet
75010 Paris

**டென்மார்க்**
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers

**லண்டன்**
P. தயா
No. 11 Boxley Road
Morden Surrey. SM 4 - 6JB

**ஜேர்மனி**
T. ஜோதி
Lange str. 243
59067 Hamm

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரைகளை சுருக்கவும், திருத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
'இளைஞன்' இதழிலிருந்து எந்தவொரு ஆக்கமும் மறுபதிப்புச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

## துள்ளி வருகுது...

என ஔவைக்கிழவியுடன் விளையாடி இறுதியில் ஔவையே உன் தமிழ் கேட்கவே எனது நாடகமிதுவெனக்கூறிய திருமுருகா -உன் ஆவேசம் தணிந்து விடக்கூடாது. நீ சாந்தியடைந்து விடக்கூடாது. இன்றும் நீ சூரசம்ஹாரம் நடத்த வேண்டும். 'இதுகளை' அழிக்க நீ மீண்டும் களமாட வேண்டும். துள்ளியெளட்டும் உன் வேல். தூரப்போகட்டும் பகை".

துள்ளி வருகுது வேல்!
தூரப் போ பகையே!

-தேன் கூட்டில் புதிய தேன் மீண்டும் சேரும்-

## நீரென்ன பெரிய...

நிறம் கொண்டவை. துல்லியமாகக் கண்டறிய முடியாதபடி, இதனில் உடலில் சேறு அமைப்பு, இது எந்த இனம் என்பதைக்காட்டிக் கொடுத்துவிடும். கறுப்பு இனத்திற்கு நீண்ட கூரான மேல்வாய் உண்டு. பற்றைகளில் தலையைப் புகுத்தி இலைகளைச் சுலபமாக ஒடிக்க இந்த அமைப்பு உதவுகின்றது. கொழுக்கி போன்ற உதட்டமைப்பைக் கொண்ட இனம் இது! இளந் தளிர்களை மேயும் இவைக்கு, இந்த வாய அமைப்பு சௌகர்யமாக அமைந்து விடுகின்றது. ஆனால், புல் மேய்ச்சலை விரும்பும் வெள்ளை இனத் திற்கோ தரையை நோக்கிய நீண்ட வாய் அமைப்பு, புல் மேய்ச்சலுக்கு உதவியாக அமைந்துள்ளது. சதுர வடிவமான உதட்டமைப்பு இதற்கு!
ஆங்கிலத்தில் "RHINOCEROS" என்றழைக்கப்படும் பெயர் இரண்டு கிரேக்க சொற்களின் கூட்டமைப்பே! "மூக்கு கொம்பு"டைய என்று அர்த்தம் படவே இச்சொல் உருவாகி இருக்கிறது. ஜெர்மனியரும் இந்தம் அர்த்தம் தொனிக்கும் விதத்திலேயே இம்மிருகத்திற்குப் பெயரிட்டுள்ளார்கள்.
சரி அப்படியானால் இம்மிருகத்தின் கொம்பு எதனால் வடிவமைக்கப்பட்டுள்ளது? தென் ஆபிரிக்காவின் டாக்டர் ஒருவர் கூற்றுப்படி இக் கொம்பும், ஆடு மாடுகளின் குளம்பை ஒத்த ஒன்றே என்கிறார். விரல் நகங்கள் வளர்வதுபோல் இது வளர்ந்து கொண்டே இருக்கும். கறுப்பு இனங்களுக்கு 4 1/2" நீளம் வரை இக்கொம்புகள் வளர, வெள்ளை இனத்தின் கொம்போ 6 1/2" வரை வளரக்கூடியது. மடியில் கனம் இருந்தால் பயப்பட வேண்டும் என்பார்கள். ஆனால் இந்த விலங்குக்கோ தலையில் கனம் (கொம்பு) இருப்பதால் பயப்பட வேண்டியிருக்கின்றது. இதன் கொம்பு ஒரு கைகண்ட ஔடதம் என்பதோடு, இதனுடைய கொம்புப் பிடியில் குத்துவாள் செய்து வைத்திருப்பது ஒரு கௌரவமாகக் கணிக்கப்படுகின்றது. இன்று பல உயிர்துறப்பதற்கு இந்தக் கொம்பே எமனாக வாய்த்திருப்பது அதனுடைய துரதிஷ்டந்தான்!
வெள்ளை இனங்கள் அழிந்து விடவில்லை என்றாலும் கறுப்பு இனம் "நாளைய டைனோசரஸ்" ஆகி விடுமோ என்று பரவலாக அஞ்சப்படுகின்றது. ஒரு றாத்தல் எடையுடைய கொம்பு 900 டாலருக்கு கள்ளச் சந்தையில் விற்பனை போகிறதாம்.
"நீரென்ன பெரிய கொம்போ?" என்று மற்றவர்கள் அதட்டலாக எம்மைக் கேட்பதன் அர்த்தமும் இப்பொழுதுதான் தெரிய வருகின்றது.

## வாசகர் உலக...

*சேலை கட்டவே பயமாக வுள்ளது. காரணம் -மார்கழி இளைஞனைப்படித்தவர்கள் இனி எங்களை ஒருமாதிரிப் பார்ப்பார்கள் என்றுதான்.*


*இளைஞனே நீ பத்திரிகை வடிவத்தில் உன் பணி தொடர... நான் வயதில் சின்னவளாயினும், என் வாழ்த்துக்கள். உன் பணிக்கு இன்றும், என்றும் எம் ஆதரவு உண்டு.*
*-பிரகாஷினி, ஜேர்மனி-*

"இளைஞன்" மார்கழி இதழ் கண்டேன். 25 ம் திகதி வரும் என இருந்தபடியால், தமிழ்க்கடைக்கு அடிக்கடி சென்று விசாரித்தேன். ஆனால், எனக்கு 3.12.95 ல் தான் கிடைத்தது. அதுவும் கடைசிப்புத்தகம் தான். என்னால் நம்பமுடியவில்லை. கடைக்கு வந்த 20 புத்தகங்களும் உடனே முடிந்து விட்டதாக கடைக்காரர் சொன்னதும், நானே திகைத்து விட்டேன். தவழ்ந்து கொண்டிருந்த இளைஞன் நடக்க துவங்கி விட்டான். நடப்பவன் ஓடத்துவங்குவான் என்பதில் ஐயமில்லை. ஓடட்டும், வேகமாக ஓடட்டும் விழமல் ஓடட்டும், தட்டு, தடுமாறாமல் ஓடுவான் என வாழ்த்துகின்றேன்.
இளைஞன் என்றும் எண்ணத்தில் இளைஞனாக இருக்க வாழ்த்துகின்றேன்.
-ரவி, பாசல்-சுவிற்சலாந்து-

## யாழ்ப்பாண...

அதேபோல் யாழ்ப்பாணத்திலிருந்து 36,000 சிங்களவர்களைப் புனருத்தாரண யோஜனைத்திட்டத்தின் கீழ் மீளக் குடியமர்த்த வேண்டும். இங்கு இனங்களுக்கிடையே நட்பு வளர வேண்டுமாயின் சிங்களவர்கள் தமிழர்களுடன் ஒன்றாக வாழ வேண்டும். மறுபுறம் நாகதீப, நாகவிஹாரை ஆகிய வணக்க ஸ்தலங்களைத் திரும்பவும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டும்.

## பூட்ஸ் வடிவில் புதிய டி.வி.




மிடில் செக்ஸில் ஹார்ரோ என்ற இடத்தில் வாழும் ரியர்ன் ஜிக்ஸ் தீபக் ஹார்ப் என்பவர்கள் வடிவமைத்துள்ள கால்பந்தாடும் 'ஷூ' இதுதான் நாகரீகத்தின் கடைசி வடிவம் என்பது போல இதை வடிவமைத்துள்ளார்கள். செயற்கைக்கோள் தொலைக்காட்சி, டர்போ பூஸ்ட், ரேடார் முதலியவை இருக்கும் ஷூ வடிவில் உள்ள நவீன டி.வி. இது! முதன் முதல் வீரர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிக்க முடியும்.

# 500 வருடங்களுக்கு முன் உயிருடன் புதைக்கப்பட்ட பெண்ணின் உடல்!



படத்தைப்பார்த்து - பயத்தால் உடல் நடுங்குகின்றதா? சுமார் 500 வருடங்களுக்கு முன்னால் இந்தப்படத்தைப் பார்த்திருந்தால், வியப்பால் கண்களை அகல விரித்திருப் பீர்கள். ஆம்! இந்த உடல் 500 வருடங்களுக்கு முன்னால் அம்பாற்ரோ (AMPATO IN PERU) நகரத்தில் 16 வயதி லேயே உயிருடன் புதைக்கப்பட்ட ஒரு அழகான இளம் பெண்ணின் உடல்!

இவ்வுடலைக்கண்டெடுத்த புதைபொருள் ஆராய்ச்சியாளர் கள் கூறுகிறார்கள் -இவள் கொலம்பஸ் வாழ்ந்த காலத் தில், நாம் ஆடு, மாடு, போன்றவற்றை இறைவனுக்கு பலி கொடுப்பதைப்போல கன்னிகழியாத இவளையும் சுமார் 500 வருடங்களுக்கு முன்னால் அம்பாற்ரோ நகரத் தில் வாழ்ந்த மக்களால் பலி கொடுக்கப்பட்டிருக்கிறாள். இவ்வுடலைப்பற்றி, தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. -ரஞ்சினிப்பிரியன்-

# மீண்டும் "கலைக்காவலர்"

பிராங்பேர்ட் தமிழ்மன்றத்தின் 1996 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைத்தேர்தல் 17. 12. 95 அன்று நடைபெற்றது.

இதில் மீண்டும் "தமிழ் மன்றத் தந்தை", "கலைக்காவலர்" ஸ்ரீபதி அவர்கள் பிராங்பேர்ட் தமிழ்மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரே 1988 ம் ஆண்டில் பிராங்பேர்ட் தமிழ்மன்றத்தை ஆரம்பித்து வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் உபதலைவராக திரு. திருநாவுக்கரசு, செயலாளராக திரு. சோதிநாதன், உபசெயலாளராக திரு. கிருஷ்ண தாஸ், பொருளாளராக திரு. சச்சிதானந்தன், பத்திராதிப ராக திரு. மோகனராஜா, கலைக்குழு பொறுப்பாளராக திரு. கேதீஸ்வரன், இசைக்குழுப்பொறுப்பாளராக திரு. சிவசுப்ரமணியம், விளையாட்டுக்குழுப்பொறுப்பாளராக திரு. ரவிசங்கர், சிற்றுண்டிக்குழுப்பொறுப்பாளராக திரு. தங்கவேலு, மண்டப நிர்வாகக்குழுப்பொறுப்பாளராக திரு. திரு. நடராஜா அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் கள்.

கடந்த இரண்டு வருடங்களைப்போல் அல்லாமல், சிறப் பான கலைநிகழ்ச்சிகளை இனி பிராங்பேர்ட் வாழ் தமிழ் மக்கள் எதிர்பார்க்கலாம்!

புதிய நிர்வாகக்குழு சிறப்பாக பணியாற்ற "இளைஞன்" குழு இதயத்தால் வாழ்த்துகிறார்கள்.

-தமிழரசன், பிராங்பேர்ட்-

## திருமலை...

மாணவர்கள் உட்பட அவர் களின் சந்தேகத்துக்குட்பட் டும் அனைவரும் ஏற்றப்பட்டு குப்புறப்படுக்கவைத்து தாக் கப்படுகின்றனர். திருமலை மாவட்ட அடையாள அட்டை இல்லை எனின் அவர் சற்று விசேசமாகக் கவனிக்கப்படுவாராம். இந்த அதிரடிக்கைது நடவடிக்கை யில் தீவுப்பகுதியிலிருந்து வந்து லொஜ்ஜொன்றில் தங் கியிருக்கும் தமிழ் ஆயுதக் குழுவொன்று சம்பந்தப்பட் டிருக்கிறது என்பது பரவ லாக அறியப்பட்டிருக்கிறது. இவர்கள் முகமூடியணிந்து தங்கள் காட்டிக்கொடுப்புக் கைக்காரியங்களை செய்து வருகின்றனர். சிலவேளைக ளில் ஆட்டோக்களிலும் வந்து திடீரென இறங்கி ஆட் களை அள்ளிச்செல்கின்ற னர்.

கார்த்திகை மாத இறுதிவ ரையே இவ்வாறான சுற்றி வளைப்புக்கள் ஏற்படும் என்று பொலிசார் தெரிவித் திருப்பினும் தமிழ்க்குழுவின் அதிரடி நடவடிக்கையால் மக்கள் பெரிதும் பாதிப்புற் றிருக்கின்றனர்.

## அவர்களுக்கு...

தேகத்திற்கிடமானவர்கள் செல்லும் வாக னங்கள் பற்றிப் பொலிசிற்கு அறிவிப்பது மட்டுமேயாகுமெனத் தெரிவித்த அவர், சிவில் பாதுகாப்பு என்ற போர்வையில் முறையற்ற நடவடிக்கைகளுக்குத் தயாராகு பவர்கள் பற்றி உடனடியாகவே பொலிசிடம் அறியத் தருமாறும் கூறினார்.

தனது சொந்த வாகனத்தின் சாரதியிடமி ருந்து சிவில் பாதுகாப்புக் குழுவினர் எனப்ப டுவோர் சிலர் அவரது அடையாள அட்டை யைப் பறிக்க முயன்றனர் என இன்னொரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இவர்கள் பொலிஸ் அதிகாரங்களைக் கையி லெடுத்துள்ளதால் பொது மக்களுக்குப் பார தூரமான பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ள தாகக் கூறிய அவ் அதிகாரி சில சிவில் பாது காப்புக் குழுவினர் எனக் கூறப்படுவோர் கொலைகாரக் கும்பலைச் சேர்ந்தோா என வும் கூறினார்.

## தீர்வு....

அரசியல் தீர்வுத்திட்டம் முன் வைக்கப்படம் தினம் தொடர் பாக இறுதித்தீர்மானம் எடுக்க வேண்டியது ஜனாதி பதி சந்திரிகா குமாரணதுங் காவின் தலைமையிலான அமைச்சரவையே எனவும் அவர் மேலும் கூறினார்.

## பெண்ணுலக....

செயலை இது நடந்துவிடுமோ என்ற அச்ச உணர்வோடு எதிர்பார்க்கும்போதும், இழந்து போனதை நினைத்து வருத்தப் படுவதாலும் கூட குறைப் பிரசவம் ஏற்படுகிறது. மேலும், உடல்சோர்வு, வலிபோன்றவை களாலும் குறைப்பிரசவம் ஏற்படும்.

குறைப்பிரச [illegible] கரு சிதைந்துவிடுவத[illegible] பெண்; ஒரு குழந்தையை மட்டும் இழந்துவிடுவதில்லை. தான் தாயாகப்போகிறோம் என்றஎதிர்பார்ப்பையும் இழந்து விடுகிறாள்.

முதன் முதலாக கர்ப்பமாக இருக்கும் பெண்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றியும், அவர்கள் எதிர்காலம், நலன்கள் போன்றவற்றைப் பற்றியும் கற்பனைக் கோட்டைகளை கட்டி வைப்பார்கள். இவைகள் கலைந்து போய் விடாதபடி பாதுகாத்துக் கொள்வதும், கவனித்துக்கொள்வதும் மிகவும் அவசியம் இல்லையா?

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) – ID77/09
பொள்ளாச்சி நசன்



Largest Circulation in Europe
இளைஞன்
ELAIGNAN
GINNHEIMER STR, 24 A
60487 FRANKFURT/M
GERMANY
TEL & FAX: 069/ 70 44 39

அன்பு உள்ளங்களின் அபிமான நிறுவனம்
குமார்ஸ் ஜுவல்ஸ்
* தங்க நகைகளின் தரம் மிகுந்த தயாரிப்புகளுக்கு இன்றே விஜயம் செய்து பாருங்கள்...
* எங்கள் தயாரிப்புகளும், தெரிவுகளும் நிட்சயம் உங்களை அதிசயிக்க வைக்கும்!
ஏனெனில்... உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணங்களில்!
KUMARS JEWELS, 80 Bld. Barbes, 75018 Paris
Mo: Marcadet Poissonniers. Tel: 42591152 Fax: 42593500

# அவர்களுக்கு உரிமையில்லை!

கொழும்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களுடன் தொடர்பானவர்களுக்கு வாகனங்களையோ, அவற்றில் பிரயாணம் செய்பவர்களையோ, அவர்களது அடையாள அட்டைகளையோ சோதிக்க எதுவித உரிமையும் இல்லையெனப் பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொலிஸாரோ, பாதுகாப்புப் படையினரோ அன்றி இவ்வாறானவர்களுக்கு வீதித் தடைகள் போட்டு அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட அதிகாரம் இல்லை. அது சட்டவிரோதமானதென அவர் கூறினார்.

சிவில் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் இரவு நேரங்களில் தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகப் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமையானது சந்

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

# தீர்வு இல்லை!

(கொழும்பு)
அரசின் அரசியல் தீர்வுத்திட்டத்தைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பிக்கும் திகதி தொடர்பாக இதுவரை இறுதி முடிவேதும் எடுக்கப்படவில்லையென நீதி அரசியலமைப்பு நடவடிக்கை அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத்திட்டம், கார்த்திகை மாதம் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுமென அரசின் தொடர்பு சாதனங்களினூடாகச் செய்திருந்த அறிவிப்பு உண்மைக்குப் புறம்பானதாகுமென பீரிஸ் கூறினார்.

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

# 2 நாடுகளுக்கு ஒரே வகை பணம்!

(பொன்)
ஐரோப்பிய கண்டத்தில் உள்ள பிரான்ஸ் நாடும் ஜேர்மனியும் பரம்பரை பகைவர்கள். முயல் தூங்கும் போதுகூட கண்ணை விழித்துக்கொண்டுதான் தூங்குமாம். அதுபோல ஜேர்மனி நாட்டின் தாக்குதலை எண்ணி தூங்காமல் விழித்திருந்த நாடு பிரான்ஸ். இப்போது அந்த பரம்பரை பகைமை மாறி 2 நாடுகளும் ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ளன.

அது மட்டுமல்ல ஐரோப்பிய கூட்டமைப்புக்கு 2 நாடுகளும் பொதுவாக ஒரே பணதாளை உருவாக்கவும் இந்த நாடுகள் முயற்சி செய்து வருகின்றன.




(கொழும்பு)
திருமலை நகரில் பொலிசாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னரைவிடத்தீவிரமடைந்து வருகின்றன. திருமலை நகருக்குள் அடிக்கடி இடம்பெற்று வரும் கொலைகளில் தமிழ்ப்போராளிக்குழு ஒன்று சம்பந்தப்பட்டிருக்கலாம், அவர்கள் நகருக்குள் " ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிசாருக்கு இருந்து வருகிறது. இதனால் அவர்கள் அடிக்கடி சுற்றிவளைப்புக்களை புதுப்புது முறைகளில் மேற்கொள்கின்றனர்.

தற்போது பஸ்களில் வரும் பொலிசார் வீதிகளில் மறைந்து நின்று வருவோரையும் போவோரையும் மறித்து பஸ்களில் ஏற்றுகின்றனர். இதில் பாடசாலை

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

# சீனாவை கலக்கும் மனைவி வியாபாரம்!

(பெய்ஜிங்)
சீனாவில் இப்போது சமையல் அறை சாதனங்கள், குளிர் சாதனப்பெட்டிகள், நாற்காலிகள் விற்போதுபோல மனைவிகளை விற்பனை செய்வது சர்வசாதரணமாகி விட்டது.

அங்குள்ள சாஸ்சி மாகாணத்தில் மட்டும் ஒரே நாளில் 231 மனைவிகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறார்கள். சீனாவில் இதுபோல மனைவியை விற்ற ஒரு ஆசாமிக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இருந்தும் கூட இந்த விற்பனை தொடர்ந்து நடந்து வருகிறது. அங்கு சராசரியாக ஒரு மனைவியின் விலை 700 DM (700 ஜேர்மன் மார்க்).

பெண் என்பவள் விற்பனைப் பொருள் அல்ல என்று சீனப்பெண்கள் சங்கம் ஒன்று இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது.

ஜேர்மனியில் 15 வருடகால வியாபார அனுபவமிக்க சிறந்த ஸ்தாபனம்! (புதுவருட மலிவு விற்பனை)
அபிராம் நிக்கோலஸ் பலஸ்
எமது பொருட்கள் அனைத்தும் மலிவு மலிவுக்கு காரணம் எமது சொந்தக் கட்டிடத்தில் அமைந்திருப்பதுதான்!
மாபெரும் மலிவு விற்பனை
· சாறி வகைகள், உடுப்புக்கள், உணவுப்பொருட்கள்
மிகக்குறைந்த விலையில்
Lange Wende 53, Neheim-Huesten, 59755 Arnsberg. Tel: 02932/82712 Fax: 02932/25312